சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 5 | இதழ்: 12 | மே - 2024 | விலை - ரூ.15/-

VOL:5 | ISSUE: 12 | MAY - 2024 | Rs. 15/-



"ஆனந்தாஸ்ரமம்"
சுவாமி ராம்தாஸ்

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.550/- மட்டும் செலுத்தி சந்தாதாரராகுங்கள்!

அரிய

பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, கும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, IDB நாடகள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"



* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.

* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: ரூ.1001/- மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-5 மலர்-12 மே - 2024

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு
திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்
திருமதி. S.சாந்தி, சென்னை.
திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.
திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.
திரு. B.முருகன், சோழவந்தான்.
டாக்டர் செல்வி. S.சௌம்யா, ஊட்டி

இதழ் வடிவமைப்பு
சிகரம் பப்ளிகேஷன்ஸ்

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி, அயனாவரம், சென்னை 600 023.
செல்: 99418 16692,88258 31068.

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

அமுத மொழி



அன்பு குழந்தையே!

உன் வாழ்வில் நடக்கும் சம்பவங்கள் எல்லாம் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டது. தீர்மானிக்கப் பட்டவைகள் எல்லாம், இன்பமாகவும், துன்பமாகவும் மட்டுமே அமைவது இல்லை, இரண்டுமே சமமான அளவிலே உன் வாழ்வில் நிகழ்கின்றது.

இன்பம்சிரிப்பு, துன்பம்வலி என்ற உணர்வுகளை உடையது. அது தான் வாழ்க்கையை புரிந்து கொள்ளவும், உணரவும் வைக்கிறது. ஆனால் நீயோ, இன்ப, துன்பத்திலேயே உழன்று கொன்டிருக்கின்றாய். அந்த மாயை உன்னை முன்னேற விடாமல் தடுகிறது.

அந்த போலியான சாயலுக்கு நீ ஏன் முக்கியத்துவம் கொடுக்கிறாய், போலியான விஷயத்தில் நிஜத்தை தொலைத்து விடாதே! மனதை அமைதியாகிக் கொண்டு அடுத்த லேலையை செய்ய தொடங்கு, உழைத்து செயல்படு. அதற்கான வெகுமதியை பற்றி நீ சிந்திக்காதே! அது என் பொறுப்பு.

உனக்கானது நிச்சயம் உன்னை வந்து சேரும். பயப்படாதே! உன்னை நான் மறக்கவில்லை. மறக்கவும் இயலாது. என் பிள்ளை நீ! என் உயிர், நாம் இருவரும் தனிதனி இல்லை. பிறகு ஏன் இந்த வீண் கவலை.

- பகவான் ஸ்ரீ சாயிபாபா

ஆசிரியர் பக்கம்...



அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!



பகவான் சாயிநாதரின் அருளால் எழுபதாவது இதழ் மூலம் சாயி சொந்தங்களாகிய உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 07.04.24 ஞாயிற்றுக்கிழமை காலை10 மணிக்கு "சாய் தியானாலயா ஆத்மஞான பீடத்தில்" (17/7A, பழனியப்பா முதல் தெரு, அயனாவரம், சென்னை 23) மிகச்சிறப்பாக நடைபெற்றது.

காலை 8 மணிக்கு ஆசிரியரின் சத்சங்கத்துடன் தொடங்கிய விழா தியானம், பஜனை எனத்தொடர்ந்தது. காலை பத்து மணிக்கு இம்மாத இதழ் வெளியீட்டுவிழா தொடங்கியது. இம்மாத இதழை, ஆன்மீக எழுத்தாளர் திருமதி. மாதங்கி பாலாஜி அவர்கள் வெளியிட, சாயி பக்தர் திரு. சுந்தர வடிவேலு அவர்கள் பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்கள்.

சாயி சேவகர்களுக்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்துவரும் 82 வயது இளைஞர் திரு.கோபால் சாய்ராம் அவர் கள் "மகரஜோதி பவுண்டேஷன்" திரு. முனுசாமி அவர்களின் குடும்பத்தாரு டன் வந்திருந்து இம்மாத இதழைப் பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்கள்.





திரு. சுந்தர் சாய், திருமதி. மாதங்கி பாலாஜி, திரு. அகஸ்டின் ஆகியோர் பக்தரிடையே தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர் “சிம்மக்குரலோன்” திரு. சந்திரன் அவர்கள் பாபாவின் பாடல்களை பாடி பக்தர்களை மெய்சிலிர்க்க வைத்தார்.

விழாவில், திரு.அண்ணாமலை, திரு. இராஜசேகர், திரு. அய்யாகண்ணு, திரு. உமா சங்கர், மற்றும் பக்தர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் சாய் தியானாலயா அன்னதான குழுவினர் அன்னபிரசாதம் வழங்கினர். புத்தக வெளியீட்டை ஒட்டி இல்லாதோருக்கும், இயலாதோருக்கும் அவர்கள் இருக்கும் இடம் தேடிச் சென்று அன்னதானம் வழங்கப்பட்டது.

இம்மாதம் நமது இதழுக்கு சென்னை வில்லிவாக்கம் சாயி சேவகர், திரு. பிரசாத் சாய்ராம் அவர்கள் இரண்டு, மூன்று வருட சந்தாதார்களையும், குடந்தை திரு. காசி சாய்ராம் அவர்கள் இரண்டு ஒரு வருட சந்தாதாரர்களையும் இணைத்து சாயி சேவை செய்துள்ளார்கள். அவர்களும்,





அவர்களது குடும்பத்தினர் அனைவரும் பகவான் சாயிநாதரின் ஆசியுடன் அனைத்து நலன்களும் பெற்று வாழ்க வளமுடன் என்று வாழ்த்துகிறோம்.

யாரெல்லாம் பகவான் சாயி பாபாவை நேசிக்கிறார்களோ அவர்கள் அனைவரும் சாயி பக்தர்களே! பொது மக்கள் யாரெல்லாம் பாபாவின் ஆன்மீகப் பணிகளை எண்ணி நல்ல எண்ணத்தோடு பாபாவை போற்று கிறார்களோ அவர்களும் நாளைய சாயி பக்தர்களே! அவ்வளவு ஏன்? யாரெல்லாம் பாபாவை வசைபாடுகிறார்களோ அவர்களும் விரைவில் பாபாவை புரிந்து, உணர்ந்து, தெளிந்து சாயி பக்தர்களாக ஜொலிக்கப் போகிறவர்களே!

இன்னும் ஏன்? யாரெல்லாம் எந்த இறை ரூபங்கள் மற்றும் இறைவனுக்கு உருவமே இல்லை என்று ஆகாயத்தை பார்த்து வணங்குகிறார்களோ அவர்களும் சாயி பக்தர்களே! இன்றைய நாத்திகரும் நாளைய சாயி அடியார்களே! பாபா இல்லாத இடம் ஏது?

எனவே காலத்தை விரயம் செய்யாதீர்கள். ஒவ்வொரு நொடியும் சாயி.. சாயி.. என்று உச்சரியுங்கள். சாயி யுகம் மலர்ந்து விட்டது. சாயி இல்லாமல் இனி உலகம் இல்லை. இக்கலியுகத்தில் பிழைப்பதற்கு ஒரே உபாயம்தான். அது பாபாவின் பாதங்களில் சரணடைவதே! கலியுக மாயையை ஒழிக்கும் ஒரே வழி இதுவே! நமக்கான கடைசிப் புகலிடமும் இதுவே!

பகவான் சாயிநாதரின் அருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று, உலக மாந்தர்கள் அனைவரும் போர், பகை, அச்சமின்றி ஆரோக்கியத்துடனும், மனநிம்மதி யுடனும் வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கிறோம். மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்.

வாழ்க வளமுடன்!
வாழ்க வையகம்!

–அன்புடன் ஆசிரியர்

ஓம் சாய்ராம்

வாழ்வை வளமாக்கும் இனிய சாயி லிகித ஜபம்

சாய் அன்பர்களுக்கு பணிவான வணக்கத்துடன்...

ப்ரபஞ்சத்தின் ஆற்றல்மிக்க சக்தி ஸ்வரூபனான நம் அன்பு சாய் மஹராஜ் க்ருபையினால் நமக்கு அளிக்கப்பட்ட திரு மந்த்ரமான,

"ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்" என்ற

சக்தி வாய்ந்த லிகித நாம ஜபம் தினமும் 108 முறை யாவது மனம் ஒன்றி எழுதி நமது கர்ம வினைகளின் தாக்கத்தில் இருந்து, தற்காப்பு செய்து கொள்வதுடன், நமது அனைத்து காரியங்களிலும், பேரொளியாய் சாய்நாதர் வழி காட்டி, பரிபூரணமாய் நம்மை ஆசீர்வதிக்க ப்ரார்த்திப்போம் வாரீர்.



'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'

தொடர்புக்கு;

சுந்தர்சாய், செல்: 9789404451


சுவாமி ராம்தாஸ்

சுவாமி ராம்தாஸ் கேரளாவில் உள்ள ஹோஸ்துர்க்கில் 1884 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் தேதி பாலகிருஷ்ண ராவ், லலிதா பாய் என்ற பெற்றோருக்கு மகனாகப் பிறந்தார். அவரது இயற்பெயர் விட்டல்ராவ். விட்டல், முதலில் ஹோஸ்துர்க்கில் உள்ள ஒரு உள்ளூர் பள்ளியில் படித்தார். பின்னர் ஜெர்மன் உயர்நிலைப் பள்ளியில் படிக்க மங்களூருக்கு அனுப்பப்பட்டார்.

பள்ளிப் பாடத்திட்டத்தில் அவருக்கு அவ்வளவாக ஆர்வம் இல்லை. எனவே அரசு மெட்ரிகுலேசன் தேர்வில் தேர்ச்சி பெறவில்லை. எனவே கலை கல்லூரியில் சேர்ந்து ஓவியம், சிற்பம் மற்றும் நாடகம் ஆகியவற்றை கற்றுத்தேர்ந்தார்.

இருப்பினும், எதிர்கால வாழ்க்கைக்கு அவை கை கொடுக்கும் என்பது நிச்சயம் இல்லை என்பதால் படிப்பை முடிப்பதற்கு முன்பு, பம்பாயில் உள்ள விக்டோரியா ஜூபிலி நிறுவனத்தில் டெக்ஸ்டைல் இன்ஜினியரிங் பட்டப் படிப்பை முடித்து, குல்பர்காவில் உள்ள ஒரு பருத்தி ஆலையில் ஸ்பின்னிங் மாஸ்டராக வேலைக்குச் சேர்ந்தார் .

வேலை கிடைத்த சில மாதங்களில், அவரது பெற்றோர், 1908 இல் உமாபாய் எனற பெண்ணை திருமணம் செய்து வைத்தனர். இந்த நிகழ்வின் இரண்டு மாதங்களுக்குள், விட்டல் ராவ் குல்பர்காவில் தனது வேலையை இழந்தார். இடையிடையே வேலையில்லா திண்டாட்டத்துடன் தென்னிந்தியா முழுவதிலும் ஒரு வேலையிலிருந்து இன்னொரு வேலைக்குச் செல்லத் தொடங்கினார்.



1913 இல் ரமாபாய் என்ற மகள் பிறந்தார். விட்டல் ராவின் செல்வம் தொடர்ந்து சரிந்தது, 1917 இல் அவர் தனது மாமனாரின் தொழிலில் சேர மங்களூருக்குத் திரும்பினார். இந்த ஏற்பாடு நீண்ட காலம் நீடிக்கவில்லை. 1919 ஆம் ஆண்டில், அவர் சேலைகளுக்கு சாயமிடுதல் மற்றும் அச்சிடும் தனது சொந்த தொழிலைத் தொடங்கினார்.

1920 வாக்கில், அவரது தொழில் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை இரண்டும் மோசமடைந்தது, மேலும் விட்டல் ராவ் மகிழ்ச்சியற்றவராகவும் விரக்தியாகவும் ஆனார். அவரது அவநம்பிக்கையான நிலையில், அவர் இந்தியாவில் புனிதமாகக் கருதப்படும் " ராம் " என்ற எழுத்தை உச்சரிப்பதில்



நிவாரணம் தேடினார்.

விரைவில், அவரது தந்தை "ஸ்ரீராம் ஜெய் ராம் ஜெய் ஜெய் ராம்" என்ற மந்திரத்தை சொல்லும்படியும் அது அவருக்கு நித்திய மகிழ்ச்சியைத் தரும் என்று அறிவுறுத்தினார்.. விட்டல் ராம மந்திரத்தை தனது விழித்திருக்கும் நேரம் முழுவதும் உச்சரிக்கத் தொடங்கினார்.அவர் ஸ்ரீ கிருஷ்ணர், இயேசு கிறிஸ்து, புத்தர் மற்றும் மகாத்மா காந்தி ஆகியோரின் போதனைகளால் ஈர்க்கப்பட்டார் ,

மேலும் ஆன்மீக வழிகாட்டு தலுக்காக பகவத் கீதை, புதிய ஏற்பாடு, ஆசியாவின் ஒளி, மற்றும் காந்தியின் புத்தகங்களை விரும்பிப் படித்தார். விட்டல் ராவ் விரைவில் பொருள் உலகில் ஆர்வத்தை இழந்தார். 1922 ஆம் ஆண்டு டிசம்பர் 27 ஆம் தேதி இரவு தனது மனைவிக்கு கடிதம் எழுதி வைத்து விட்டு வீட்டை விட்டு வெளியேறினார்.

காவேரி நதிக்கரையில் உள்ள ஸ்ரீரங்கத்தில், காவி உடைகளை அணிந்து சன்னியாசியாக துறவு ஏற்றுக்கொண்டார். தனது பெயரை 'ராம்தாஸ்' என்று மாற்றிக்கொண்டு தனக்குத்தானே மூன்று சபதங்களைச் செய்து கொண்டார். 1.ஸ்ரீராமருக்குத் தனது வாழ்க்கையை அர்ப்பணிப்பது, 2.பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிப்பது, 3.தானமாக வழங்கப்படும் உணவை மட்டுமே உண்டு வாழ்வது.

ராமேஸ்வரம், மதுரை, சிதம்பரம் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு இந்து புனித யாத்திரை தலங்களை தரிசித்த பிறகு, சுவாமி ராமதாஸ் திருவண்ணாமலை வந்தார். இங்கு அவர் ஸ்ரீ ரமண மகரிஷியை சந்தித்து ஆசி பெற்றார். இந்த சந்திப்பின் விளைவாக, அருணாச்சலத்தில் உள்ள ஒரு குகையில் 21 நாட்கள் தனிமையில் வாழ்ந்தார் .

சுவாமி ராம்தாஸ், பூரி, தட்சிணேஸ்வர் காசி, ஹரித்வார், ரிஷிகேஷ், கேதார் நாத், பத்ரிநாத், மதுரா, பிருந்தாவன் உட்பட இந்தியா முழுவதும் உள்ள யாத்திரை மையங்களுக்கு விஜயம் செய்தார். இந்த எல்லா இடங்களிலும் அவர்

அன்னியர்களால் உணவு, உடை அளிக்கப்பட்டு வழிநடத்தப்பட்டார்.

முஸ்லிம் ஆலயமான அஜ்மீர் தரிசனத்திற்குப் பிறகு, அவர் தெற்கு நோக்கி நகர்ந்து, துவாரகா மற்றும் பந்தர்பூருக்குச் சென்றார். பின்னர் அவர் ஹூப்ளியில் உள்ள ஸ்ரீ சித்தாரூட சுவாமியை தரிசிக்க சென்றார். இங்குதான், 1923 இல், அவரது குடும்பத்தினர் இறுதியாக அவரைக் கண்டுபிடித்தனர். அவரது மனைவியும் மகளும் ஹூப்ளிக்கு வந்து சேர்ந்தனர்.



சித்தாரூட சுவாமியின் ஆலோசனையின் பேரில், சுவாமி ராம்தாஸ், ருக்மாபாய் மற்றும் அவரது மகளுடன் மங்களூருக்குத் திரும்பினார். ஆனால் அவர்களுடன் வீட்டிற்குச் செல்வதற்குப் பதிலாக, அவர் அருகிலுள்ள கத்ரி மலைகளுக்குச் சென்று, பஞ்ச பாண்டவர் குகையில் வசிக்கத் தொடங்கினார், அங்கு அவர் தனது ஆன்மீக நடைமுறைகளைத் தொடர்ந்தார். இந்த குகையில் தான் அவர் தனது முதல் புத்தகமான In Quest of God எழுதினார்.

ஸ்வாமி ராம்தாஸ் இன் தி விஷன் ஆஃப் காட் என்ற புத்தகத்தில் பஞ்ச பாண்டவர் குகையில் தங்கியிருந்த போது ஜீவன்முக்தா நிலையை அடைந்ததையும், "அனைத்தும், எல்லாரும், ராம்தான்" என்ற எண்ணம் உதித்ததையும் விவரிக்கிறார். இந்த புறநோக்குடன் ராமதாஸின் பணி தொடங்கியது. கத்ரி குகையில் அவர் தங்கியிருந்தபோது அதன் முழுமையும் மகத்துவமும் அவருக்கு வெளிப்பட்டது.

சுவாமி ராம்தாஸ் மற்றொரு யாத்திரையைத் தொடங்க குகையை விட்டு வெளியேறினார். சுவாமி ராம்தாஸ் இமயமலையில் உள்ள வசிஷ்டாஷ்ரம் அல்லது வசிஷ்ட குகைக்கு விஜயம் செய்தார், அங்கு அவர் கிறிஸ்துவை தரிசனம் செய்தார்.

அறிவொளியுடன் வரும் சித்திகளை அல்லது ஆன்மீக சக்திகளை அவர் காட்டத் தொடங்கினார், மேலும் அவர் எங்கு சென்றாலும் பெரும் கூட்டத்தை ஈர்த்தார். பல வருடங்கள் அலைந்து திரிந்த பிறகு, ஸ்வாமி ராம்தாஸ் 1928 ஆம் ஆண்டு ஜூன் 3 ஆம் தேதி காசர்கோட்டில் ஒரு சிறிய ஆசிரமத்தில் தங்கினார். அது ஒரு ஒற்றை அறை மற்றும் ஒரு திறந்த வராண்டாவைக் கொண்டிருந்தது. இங்குதான் அவருடைய முக்கியமான சீடரான கிருஷ்ணாபாய் அவரைச் சந்தித்தார்.

ஒரு இளம் விதவை, தனக்கு ஆன்மீக விடுதலையைத் தரும் குருவைக் கண்டுபிடிக்க ஆசைப்பட்டாள், கிருஷ்ணாபாய் சுவாமி

ராம்தாஸிடமிருந்து ராம மந்திரத்தை ஏற்றுக்கொண்டு, அவருடைய வழிகாட்டுதலின் கீழ் தனது ஆன்மீக பயணத்தைத் தொடங்கினார். சுவாமி ராம்தாஸின் மகள் அவரை பப்பா என்று அழைத்ததைக் கண்டு தானும் சுவாமி ராம்தாஸை 'பப்பா' என்று அழைக்கத் தொடங்கினார். பின்னர், சுவாமி ராம்தாஸ் அவரது பெரும் பாலான பக்தர்களுக்கு 'ராம்தாஸ் பப்பா' ஆனார்.

ஒரு வருடம் கழிவதற்குள், அன்னை கிருஷ்ணபாய் தனது இரண்டு குழந்தைகளை விட்டுவிட்டு, ஆன்மீகப் பயிற்சியை முடிப்பதற்காக ஆசிரமத்தில் நிரந்தரமாக தங்கி விட்டார். ஆசிரமத்தில் ஒரு கவர்ச்சியான இளம் பெண் இருப்பது சுவாமி ராம்தாஸ் மற்றும் அன்னை கிருஷ்ணாபாய் இருவரையும் பொது விமர்சனத்திற்கு உள்ளாக்கியது.

ஆசிரமமும் அதன் ஆரம்ப பிரபலத்தை இழந்தது. பின்னர், அன்னை கிருஷ்ணாபாய் இந்த காலகட்டத்தை நகைச்சுவையுடன் நினைவு கூர்ந்தார். "காசர்கோட்டில் ஆசிரமம் தொடங்கப் பட்டபோது, தினமும் பஜனை மற்றும் சத்சங்கத்திற்கு மக்கள் குவிந்தனர், அவர்கள் அப்பா வுடன் பல மணிநேரம் செலவழித்தனர். ஆனால் நான் அப்பாவிடம் வந்த பிறகு, அவரிடம் மிகுந்த பக்தி கொண்டவர்கள், படிப்படியாக விலகி, ஒரு காலத்தில் அப்பாவும், நானும், சில காகங்களும் தவிர வேறு யாரும் அங்கு இருக்கவில்லை.

இருப்பினும் அன்னை விடா முயற்சியுடன் நிர்விகல்ப சமாதி நிலையை அடைந்தார், இது அன்னை கிருஷ்ணாபாயை அனைத்து மன கருத்துக்கள், மற்றும் உருவங்களுக்கு அப்பால் அழைத்துச் செல்கிறது. சிறிது காலத்திற்கு பிறகு, அந்நியர்கள் இரவில் ஆசிரமத்திற்குள் நுழைந்து அன்னையைத் தாக்க முயன்றனர். அன்னைக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்றாலும், சுவாமி ராம்தாஸ் அன்றிரவு ஆசிரமத்தை கலைத்துவிட முடிவு செய்தார்.

1931 ஆம் ஆண்டு மே 15 ஆம் தேதி



சுவாமி ராம்தாஸின் பக்தர்களால் காஞ்சங்காட்டில் 'ஆனந்தாஷ்ரம்' என்று அழைக்கப்படும் ஒரு புதிய ஆசிரமம் நிறுவப்பட்டது. இதுவே சுவாமி ராம்தாஸின் வாழ்நாள் முழுவதும் முக்கிய வசிப்பிடமாக ஆனது. ஆசிரமம் உள்ளூர் மக்களுக்கு உதவுதல் மற்றும் சுவாமி ராம்தாஸின் உலகளாவிய அன்பு மற்றும் சேவை பற்றிய செய்தியைப் பரப்புதல் ஆகியவற்றின் பணிகளைத் தொடர்கிறது.

1950 வாக்கில், குஜராத்தின் பாவ்நகரில் குன்வந்தராய் அவர்களால் சுவாமி ராம்தாஸின் நினைவாக 'ராம்தாஸ் ஆசிரமம்' என்ற பெயரில் மற்றொரு ஆசிரமம் நிறுவப்பட்டது . உடல்நலக் குறைவால் பயணம் செய்வதை நிறுத்தும் வரை, சுவாமி ராம்தாஸ் ஆண்டுதோறும் ஒரிரு மாதங்கள் இங்கு தங்கினார். ஆண்டின் பிற்பகுதியில், இந்த ஆசிரமம் மற்ற புகழ்பெற்ற துறவிகளுக்கு இடமும், உணவும் அளித்தது.

1954 ஆம் ஆண்டில், சுவாமி ராம்தாஸ் ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அவரது "உலகம் கடவுள்" (1955) என்ற புத்தகம் இந்தப் பயணத்தைப் பற்றிய விவரத்தை வழங்குகிறது.

உலகமே கடவுள் புத்தகத்தில் சுவாமி ராம்தாஸ் அன்றைய தனது நிலையைப் பற்றி விளக்குகிறார்:

காலத்தையும் இடத்தையும் கடந்த ராமதாஸின் வாழ்க்கைக்கு எதிர்காலம் இல்லை. இதில் புதிதாக சாதிக்கவோ அடையவோ எதுவும் இல்லை. இது காஸ்மிக் ரியாலிட்டியுடன் ஒன்று. பிறப்புக்கும் இறப்புக்கும் சம்பந்தம் இல்லை. நித்திய அமைதி மற்றும் நித்திய இயக்கம்.

எல்லையற்ற இருப்பு ஒரு புள்ளியாக குறைக்கப்பட்டது மற்றும் ஒரு புள்ளி அனைத்து கற்பனையான வரம்புகளுக்கு அப்பால் விரிவடைந்தது இவ்வாறு ராமதாஸின் வாழ்க்கை நித்தியத்தின் இசையுடன் ஒலிக்கிறது. அதன் இனிப்பு முடிவில்லாதது. இது உன்னதமான அமைதி, அமைதி மற்றும் அமைதி ஆகியவற்றின் தெய்வீக சிம்பொனியாகும், இது விவரிக்க முடியாதது.

உலகளாவிய அன்பு மற்றும் சேவையின் உணர்வை உள்ளடக்கிய தன்னிச்சையான செயல்பாடுகளுடன் இணக்கமானது. சச்சிதானந்தரின் மார்பில் நடனமாட அதிலிருந்து பேரின்பத்தின் அலைகள் எழுகின்றன , தன்னைத்தானே இழுக்கின்றன. அதன் உருவாக்கம் அழிவு, அதன் ஆரம்பம் அதன் முடிவு. எதிரொலிக்கும் மௌனம்! அது ராமதாஸ்!

ஸ்வாமி ராம்தாஸ் 25 ஜூலை 1963 இல் இந்த பூமிக்கு வந்த வேலையை நிறைவு செய்தார். ஆனந்தாஷ்ரமத்தில் அவரது உடல் தகனம் செய்யப்பட்ட இடத்தில் ஒரு சன்னதி அல்லது கட்டப்பட்டது.

சுவாமி ராம்தாஸின் அறியப்பட்ட சீடர்களில் மாதாஜி கிருஷ்ணாபாய், சுவாமி சச்சிதானந்தா, சுவாமி முக்தானந்தா மற்றும் யோகி ராம்சுரத்குமார் ஆகியோர் அடங்குவர். அவர் இசையமைப்பாளர் மற்றும் எழுத்தாளர் திலீப் குமார் ராய், அமெரிக்க ஆன்மீகவாதியான மில்ட்ரெட் ஹாமில்டன், மாரிஸ் ஃப்ரைட்மேன் அல்லது சுவாமி

பாரதானந்தா, மற்றும் டிவைன் லைஃப் சொசைட்டியின் சுவாமி சிதானந்த சரஸ்வதி உட்பட பல ஆன்மீக தேடுடல் உள்ள ஆத்மாக்களை உருவாக்கினார் .

சுவாமி ராமதாஸ் மதங்களுக்கு இடையே பாகுபாடு காட்டவில்லை. அவர் எழுதுகிறார்: "ராம்தாஸ் எந்த ஒரு குறிப்பிட்ட சமயத்தையும் சார்ந்தவர் அல்ல. அனைத்து மதங்களும், நம்பிக்கைகளும், மதங்களும் ஒரே இலக்கை நோக்கிச் செல்லும் வெவ்வேறு பாதைகள் என்று அவர் நம்புகிறார்.

அனைத்து இருப்புக்கும் முதல் நித்திய காரணம். அது கீதையில் இருந்தாலும் சரி! பைபிள் அல்லது குரான், எல்லாவற்றிலும் அதே குறிப்பு ஒலிப்பதைக் காண்கிறோம், அதாவது சுயசரணடைதல் என்பது. விடுதலை அல்லது இரட்சிப்புக்கான மிக உயர்ந்த வழி அதுவே!

ராமாயணத்தில் விவரிக்கப்பட்டுள்ள தசரதரின் மகனும் அவதாரமான, ஸ்ரீராமிலிருந்து அவர் குறிப்பிடும் 'ஸ்ரீராம்'வேறுபட்டதா என்று கேட்டதற்கு, சுவாமி ராம்தாஸ் பதிலளித்தார், "ராம்தாஸ் உங்களுக்கு கபீரின் வார்த்தைகளில் பதிலளிக்கின்றான்.

'என் ராமன் மாபெரும் உண்மை, பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து உயிரினங்களின் இதயங்களி வசிப்பவன் என் ராமன். எல்லாவற்றிலும் வியாபித்துள்ள, உள்ளார்ந்த மற்றும் அனைத்தையும் தாண்டிய உண்மை, என் ராமன் வடிவங்களை ஏற்றுக்கொண்டான். அந்த வகையினில் என் ராமன் தசரதனின் மகனும் கூட. ஸ்ரீராமன் அனைத்தையும் உள்ளடக்கிய மற்றும் அனைத்தையும் தாண்டிய பரம கடவுள்.'

சுவாமி ராம்தாஸ் அனைத்து ஆன்மீக நெறிகள் மற்றும் நிறுவனங்கள் ஒரு புள்ளி வரை மட்டுமே பயனுள்ளதாக இருக்கும் என்று நம்பினார். அவர் கூறினார், "தவறான மரபுகள் மற்றும் ஆடம்பரமான அவதானிப்புகள் உடைக்கப்படும்போது, ஆன்மா விடுவிக்கப்படுகிறது.

உண்மையை உணர்ந்து கொள்வதற்கு வெளிப்புற உபாயங்கள் தேவையில்லை. எந்த ஆடையும், எந்த அடையாளமும், எந்த வழிபாட்டு முறையும், எந்த மதமும் உங்களுக்கு உதவ முடியாது. இவை அனைத்தையும் விட்டுவிட்டு, உங்கள் ஆவியின் பரிபூரண நிர்வாணத்தில் நித்தியத்தை சந்திக்கச் செல்ல வேண்டிய நாள் வரும்.

எளிமை, தன்னிச்சையான தன்மை மற்றும் பணிவு ஆகியவை உங்கள் வாழ்க்கையின் வழிகாட்டும் கொள்கைகளாகும். நீங்கள் அனைவருடனும் சுதந்திரமாக நடமாடுவீர்கள். நீங்கள் அனைவரையும் ஒரே மாதிரியாக நேசிக்கிறீர்கள். கணக்கிடும் மனித மனத்தால் நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளை நீங்கள் உடைக்கிறீர்கள்.

ஆன்மீக வானத்தின் எல்லையற்ற பரப்பில் நீங்கள் ஒரு சுதந்திரப் பறவையைப் போல உயருகிறீர்கள். கோவில்கள், ஆசிரமங்கள், மசூதிகள், தேவாலயங்கள், ஜெப ஆலயங்கள், விகாரைகள் போன்றவை உங்கள் ஆன்மாவை சிறைப்படுத்த முடியாது. எல்லா இடங்களிலும் உங்கள் ஆன்மாவின் மகிழ்ச்சியையே நீங்கள் காண்கிறீர்கள்...

– வே.ஸ்ரீராம்

சாய் சரிதம்–2

கதை வழியில்

எனது கதைகளை உங்களது உள்ளத்தில் பதிவேற்றுங்கள். ஒவ்வொரு கதையும் தரும் குறிப்பு நுட்பத்தை நன்றாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அதனால் உங்களது மனத்தின் பதைபதைப்பு மறைந்து தொழியும். உங்களுக்கு உண்மையான சாந்தியும் அமைதியும் கிடைக்கும். எனது கதைகள் உங்களுக்கு உண்மையான வழியைக் காட்டி ஆசீர்வதிக்கும்.

– ஸ்ரீ சீரடி சாய்பாபா



சாயி தரிசனம் செய்து விட்டு வாடாவிற்கு வந்து திரு. தீட்சித் அவர்களின் கைகளைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் மல்க பேச்சற்று நின்றேன். என் நிலையை பரிபூரணமாக உணர்ந்த தீட்சித் என் முதுகில் தட்டிக் கொடுத்து, இனிமேல் தான் கதையே ஆரம்பமாகப் போகிறது. இதற்கே இப்படி வியந்துபோய் நின்றால் எப்படி? போய் குளித்து தயாராகுங்கள். சாயி மசூதிக்கு வந்ததும் சாவகாசமாக சென்று தரிசிக்கலாம் என்றார்.

நான் சென்று ரயிலில் வந்த அலுப்பு தீரக் குளித்துவிட்டு வேறு உடையணிந்து கொண்டு தயாராகி வந்ததும், தீட்சித் அவர்களுடன் மசூதிக்குச்சென்று மீண்டும் ஒரு முறை பாபாவிற்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தேன். பாபா என்னை மேலும் கீழுமாகப் பார்த்தார். பிறகு தன் கையருகில் இருந்த பேடாக்கள் நிறைந்த பெட்டியை எடுத்து என்னிடம் கொடுத்தார்.

நான் உடனே, அதில் இருக்கும் பேடாக்களை எடுத்து அங்கிருந்த பக்தர்கள் அனைவருக்கும் சமமாகப் பங்கிட்டு விநியோகித்தேன். பிறகு நானும், தீட்சித்தும் பாபாவிற்கு சற்று தூரத்தில் சென்று அமர்ந்து கொண்டோம்.

தீட்சித் என்னிடம், ரகுநாத், பாபா உனக்குக் கொடுத்த பிரசாதத்தை நீ

ஏன் அனைவருக்கும் பங்கிட்டுக் கொடுத்தாய்? என்று கேட்டார். பாபா என்னிடம் பேடாக்களை கொடுத்த போது என் மனதிற்குள் அனைவருக் கும் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று தோன்றியது அதனால் அனைவருக்கும் கொடுத்துவிட்டேன். வேறொன்றும் இல்லை என்றேன்.



தூரத்தில் இருந்து எங்களைப் பார்த்த பாபா நாங்கள் பேசியதைக் கேட்டது போல் மெல்ல புன்னகை பூத்தார். விரல்களை மேல் நோக்கிக் காட்டி "அல்லா மாலிக்" என்றார். கிட்டத்தட்ட இரண்டு மணி நேரத்திற்கு மேலாக பாபாவின் முன்னால் அமர்ந்திருந்தது ஏதோ தேவலோகத்தில் அமர்ந்திருந்ததைப் போல இருந்தது.

பாபாவைப் பார்க்க பம்பாயில் இருந்து ஒரு பஜனைக்கோஷ்டி மசூதிக்கு வந்தார்கள். அவர்களுக்கு வழிவிடும் விதமாக நாங்கள் சென்று பாபாவிடம் விடைபெற்று கொண்டு தங்குமிடத்திற்கு வந்துவிட்டோம்.

இரவு உணவிற்குப்பிறகு, சாதே வாடா வராண்டாவில், என்னு டன், தீட்சித், பாலாசாகேப் பாடே, மாதவ்ராவ், இன்னும் சிலரும் பாபாவைப்பற்றி பேசிக் கொண்டிருந்தோம். பேச்சு அப்படியே குரு வழிபாட்டைப் பற்றி திரும்பியது. பாலா சாகேப்பாடே அவர்கள் "குரு இல்லா வித்தை குருட்டு வித்தை" என்று கூற, எனக்கோ என் நண்பரின் குரு ஞாபகத்திற்கு வந்துவிட்டார்.

நான் உடனே, நம்முடைய கடமைகளை நாம் சரிவர செய்யாமல், பொறுப்பை குருவின் மேல் போட்டுவிட்டு எந்த முயற்சியும் இல்லாமல் சும்மா இருப்பது முட்டாள்தனமில்லையா? அப்படி நம்மை சோம்பேறியாக்குவது தான் குருவின் வேலையா? அப்படிப்பட்ட குரு என்பவர் நமக்கு அவசியமா? நம் சுதந்திரத்தை நாம் ஏன் மற்றவர்களிடம் இழக்க வேண்டும். ஒருவன் தன்னாலான முயற்சிகளைச் செய்து தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமே இல்லாமல் சோம்பேறியாக தூங்குபவனுக்கு குரு என்னதான் செய்துவிட முடியும். என்று நான் திரு. பாலா சாகேப் பாடேயுடன் வாதத்தில் ஈடுபட்டேன்.

அதற்கு திரு. பாலா சாகேப் பாடே அவர்கள், ஒவ்வொரு மனிதனுக்கும் தலைவிதி என்று ஒன்று இருக்கின்றது. அதன்படி நடப்பது நடந்தே தீரும். உன்னைப் போல் பேசிய பல பெரியோர்கள் எல்லாம் தோற்றிருக்கின்றார்கள்.மனிதன் ஒரு வழியில் நினைக்க, தெய்வம் வேறு வழியில் செயல்படும். நீங்கள் மிகவும் அறிவாக பேசுவதாக நினைத்துக் கொண்டிருக்கின்றீர்கள். உம்முடைய புத்தி சாதுர்யத்தை தயவு செய்து நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். நம்மைப்பற்றி நாமே பெருமையாக பேசித்திரிவது அறிவாகாது. அது அகங்காரமாகும். இரண்டுமே நமக்கு எப்போதும் உதவாது என்றார்.

குரு, பக்தி, கொள்கைகள், பழக்கங்கள் ஆகியவற்றுடன்

விவாதம் ஒரு மணிநேரத்திற்கு மேல் நடைபெற்றும் யாரும், யாருடைய கருத்தையும் ஏற்றுக்கொள்ளவில்லை. நான் அவருடன் வாதாடி களைப் படைந்து மன நிம்மதியை இழந்ததுதான் மிச்சம்.

அறைக்கு வந்ததும், நாமோ குருவை சந்திக்க வந்திருக்கின்றோம். நாம் ஏன் இதுபோன்ற வாதத்தில் கலந்து கொண்டோம் என்று என்னை நானே கேட்டுக்கொண்டேன். நடந்த வாதத்தை மீண்டும் நினைத்துப்பார்த்த போது, திடகாத்திரமான நம் உடல் மீது நமக்கிருக்கும் அபிமானமும், அதனால் ஏற்படுகின்ற அகங்காரமுமே விவாதத்தை வளர்க்கின்றது என்று உணர்ந்து கொண்டேன்.

மறுநாள் காலையில் நாங்கள் அனைவரும் குளித்து முடித்துவிட்டு பாபாவைப் பார்க்க மசூதிக்குச் சென்று பாபாவைப் பணிந்து வணங்கிவிட்டு அவர் முன் அமர்ந்தோம். பாபா தீட்சித்தை நோக்கி, "சாதே வாடாவில் நேற்றிரவு எதைப் பற்றி விவாதம் நடந்தது" என்று கேட்டார். பின்பு என்னை சற்று உற்றுப் பார்த்துவிட்டு, இந்த "ஹேமாட்பந்த் என்ன கூறுகிறார்" என்றார்.

தீட்சித் என்னைப்பார்த்துக் கொண்டே இந்த ரகுநாத்தான் பாலா சாகேப்புடன் குரு அவசியமா என்பதுபற்றி விவாதத்தில் ஈடுபட்டார் என்று கூறியதை பாபா கவனித்தாரா, இல்லையா என்று தெரியவில்லை. அதற்குள் அருகே எரிந்து கொண்டிருந்த துனியைப் பார்த்து ஏதோ பேச ஆரம்பித்துவிட்டார்.

அந்த நேரத்தில் மகல்சாபதி, இராதாகிருஷ்ணமாயி பாபாவிற்கு கொடுத்தனுப்பிய பிரசாதங்களுடன் அங்கு வந்து அதை பாபாவின் முன் சமர்ப்பித்தார். பாபா அதில் இருந்த கோதுமை கேசரியை எடுத்து தீட்சித்திடம் கொடுத்தார்.

கேசரியை பணிவோடு பெற்றுக் கொண்ட தீட்சித், நான் சீரடியைவிட்டு புறப்படலாமா? என்று கேட்டார். அதற்கு பாபா "போய்தானே ஆக வேண்டும்" என்றார். தங்களை விட்டு எங்கே போவது என்றார் தீட்சித், பாபா மேலே கைகளை காட்டி "உயரே..மேலே" என்றார்.

உடனே தீட்சித் "வழி எப்படிப்பட்டது" என்று கேட்டார். துனியையே வெறித்துப் பார்த்தபடி பாபா கூறினார். "அங்கே போவதற்கு பல வழிகள் உள்ளன. இங்கிருந்தும் ஒரு வழி உள்ளது. ஆனால் பாதை மிகவும் கடினமானது. வழியிலுள்ள காடுகளில் ஏராளமான புலிகளும், ஓநாய்களும், பாம்புகளும் உள்ளன என்றார்.

"ஒரு வழிகாட்டியை அழைத்துச் சென்றால் என்ன" என்று தீட்சித் கேட்க, அதற்கு பாபா, "அப்போது கடினம் இல்லை புலி, ஓநாய், பாம்புகள், படுகுழிகளில் இருந்து உன்னைக் காத்து உனது குறிக்கோளை அடைய உதவுவார்" என்றார். மேலும், வழிகாட்டி இல்லை என்றால் காடுகளில் நீ காணாமல் போகலாம். அல்லது படுகுழியில் விழுந்து ஆபத்தில் சிக்கலாம் என்று கூறி என்னையே குறுகுறுவென்று பார்த்தார்.

பாபாவின் பார்வையை என்னால் தாங்கிக்கொள்ள முடியாமல் சங்கோஜத்தில் நெளிந்தேன். சாதே வாடாவில் நடந்த குரு அவசியமா என்ற விவாதத்திற்கு இதுவே பதில் என்பதை நன்றாக உணர்ந்தேன். மேலும் ஆத்ம ஞான விசயங்களைப்

பெற, ஒரு மனிதன் சுதந்திரமானவனா? கட்டுப்பட்டவனா? என்ற விவாதம் அவசியமில்லை என்பதையும், மிகப் பெரிய அவதாரங்கள் என்று நாம் கூறும், ஸ்ரீராமர், ஸ்ரீ கிருஷ்ணரும் கூட, தன்னையறிவதற் காக, தங்களது குரு வசிஷ்டர், சாந்தீபன் ஆகியோரிடம் சரணடைந்தார்கள் என்பதும் என் மனதிற்குள் தோன்றி என் கருத்தை மாற்றிக்கொள்ள உதவின.


கந்தோபா ஆலயம், சீரடி.

இருப்பினும், எனக்கு இரண்டு விசயங்களைப்பற்றி மிகுந்த ஆச்சர்யம் உண்டாயிற்று. ஒன்று, என்னை ஏன் பாபா "ஹேமாட்பந்த்" என்று அழைக்க வேண்டும். இரண்டு, நேற்றிரவு நாங்கள் விவாதம் நடத்திய சாதேவாடா மசூதியில் இருந்து சற்று தொலைவில் உள்ளது. அங்கு நாங்கள் விவாதித்தது பாபாவிற்கு எப்படி தெரியும்.

பிரபஞ்சம் முழுக்க நிறைந்திருப்ப வரும், ஒவ்வொருவரின் மனதிற்குள் இருந்து ஆட்டிவைப்பவராகவும், இல்லாவிடில் எங்களது விவாதத்தை பாபா எங்கனம் அறிந்திருக்க முடியும். எனவே நானா கூறியதைப்போன்று பாபா சர்வவியாபி என்பதை அப்போது நான் உணர்ந்து கொண்டேன்.

அடுத்ததாக பாபா என்னை ஏன் ஹேமாட்பந்த் என்ற பெயரால் அழைக்க வேண்டும் என்று சிந்திக்க ஆரம்பித்தேன். ஹேமாட்பந்த் என்பவர் யாதவ அரசவம்சத்தைச் சேர்ந்த ராமதேவ், மகாதேவ் என்ற தேவகிரி அரசர்களின் புகழ்பெற்ற மந்திரியாவார்.

கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கி நற்பண்புகள் நிரம்பப்பெற்ற அவர் ஆன்மீகவிசயங்கள் அடங்கிய, சதுர்வர்க சிந்தாமணி, ராஜ்யப்ரசஸ்தி போன்ற பல உயர்ந்த நூல்களை எழுதியவர். மராத்தி சுருக்கெழுத்தின் தந்தையுமாவார். கணக்கு பேரேடுகளில் புதிய முறைகளை புகுத்தியவர் அவரே.

ஆனால் நானோ முற்றிலும் மாறுபட்டவன். அவருக்கு முன்னால் எந்த தகுதியும் இல்லாத எனக்கு பாபா எதற்கு அந்தப் பட்டத்தை சூட்டினார் என்பதை என்னால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. தீவிரமாக சிந்தித்துப் பார்த்ததில். அது என் அகங்காரத்தை

அழித்து பணிவாகவும், அடக்கமுடனும் இருக்க வேண்டும் என்பதற்காகவே அளிக்கப்பட்டதாக எடுத்துக் கொண்டேன்.

இரண்டுநாட்கள் கழித்து தீட்சித் பாபாவிடம் அனுமதி பெற்று பம்பாய்க்குச் சென்றுவிட்டார். என் உடன் இருந்த மற்றவர்கள் வேறு வேலைகளைப் பார்க்கப் போயிருக்கின்றார்கள். அதிகாலையில் எழுந்து கொண்ட நான் காலைக் கடன்களை முடித்துவிட்டு, பாபாவை தரிசிக்க நான் மட்டும் மசூதிக்குச் சென்றேன்.

அங்கு சென்றவுடன் நான் பார்த்த காட்சி, எனக்கு வியப்பாகவும், ஆச்சர்யமாகவும் இருந்தது. பாபா அப்போதுதான் எழுந்து வந்தவர், மசூதியின் முற்றத்தில் இருந்த பானையில் இருந்து தண்ணீரை எடுத்து முகத்தையும், வாயையும் கழுவிக்கொண்டார்.

பின்பு தனது கப்னியின் கைகளை மடித்துவிட்டுக்கொண்டு,ஒரு சாக்கை எடுத்து தரையில் விரித்தார். மூலையில் இருந்த மாவரைக்கும் திருகையை உருட்டி வந்து அதன் மேல் வைத்தார். பின்பு கோதுமை மூட்டையை அருகில் இழுத்து வைத்துக் கொண்டு கால்களை நீட்டிக் கொண்டு அமர்ந்து கொண்டார். பிறகு கோதுமையை அள்ளி திருகையில் இட்டு அரைக்கத் தொடங்கினார்.

எந்த உடைமையையும், சேமிப்பும் வைத்துக்கொள்ளாமல், பிச்சை எடுத்து வாழும் இவர் கோதுமையை அரைக்க வேண்டிய அவசியம் என்ன என்று யோசித்தேன். அங்கு வந்த சில பக்தர்களும் இதையே பேசினார்கள். ஆனாலும் அங்கிருந்த ஒருவருக்கும் பாபா என்ன செய்கிறார் என்று கேட்பதற்கு துணிவு வரவில்லை.

பாபா மாவு அரைக்கும் செய்தி கிராம் முழுக்க பரவியது. பாபா மாவு அரைப்பதைப் பார்க்க ஆண்களும், பெண்களும், பெருந்திரளாக மசூதிக்கு வந்தவண்ணம் இருந்தனர். பாபா மாவரைப்பதை அனைவரும் வேடிக்கை பார்த்தார்களே ஒழிய, அவர் அருகில் சென்று ஏன் உங்களுக்கு இந்த வேலை என்று கேட்பதற்கு ஒருவரும் முன் வரவில்லை.

இந்த செய்தி சாலாவில் இருந்த இராதாகிருஷ்ணமாயிக்கு தெரிவிக்கப்பட்டது. அவள் உடனே தனது சிநேகிதிகளான நான்கு திடகாத்திரமான பெண்களை தேர்ந்தெடுத்து மசூதிக்குச் சென்று பாபாவிடம் இருந்து மாவரைக்கும் வேலையை வாங்கி நீங்கள் செய்யுங்கள் என்று கூறி அனுப்பி வைத்தாள்.

உடனே நான்கு பெண்களும், தைரியமாக கூட்டத்தை விலக்கிக் கொண்டு, பாபாவிடம் சென்று பாபா நாங்கள் எல்லாம் இருக்கும் போது உங்களுக்கு ஏன் இந்த வேண்டாத வேலை. எங்களிடம் கூறினால் நாங்கள் செய்ய மாட்டோமா என்றபடி அவரின் கைகளைப் பிடித்து வலுக்கட்டாயமாக ஓர் புறம் இழுத்து விட்டு, ஒருவழியாக திருகையை கைப்பற்றி, அரைக்க ஆரம்பித்தனர்.

பாபா, அவர்களைப் பார்த்து, ஏன் உங்களுக்கு உங்களது வீட்டு வேலைகள் ஏதும் இல்லையா? நான் என் வேலையை செய்கிறேன். நீங்கள் உங்களது வேலையைப் பாருங்கள். மரியாதையாக இங்கிருந்து போய்விடுங்கள் என்று கடுமையான சொற்களால் திட்ட ஆரம்பித்தார்.

அந்த நான்கு பெண்களோ, அவரின் கடும் சொற்களை ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ளாமல், "அளவில்லா கருணை பொழியும் கார்முகிலே! மனதெல்லாம் இன்பம் நிறையும் உனது மொழியே!" என்றவாறே பாபாவின் லீலைகளைப் பாடியவாறே வேகமாக அரைக்க அரைக்கத் தொடங்கினர்.

பாபா முதலில் கடும் வசவுகளைப் பொழிந்தாலும், அந்த பெண்களின் அன்பையும், பக்தியையும் கண்டு மிக்க ஆனந்தம் கொண்டு புன்னகை புரியலானார்.

சிறிது நேரத்திற்குப்பின் நான்கு பெண்களும் ஒரு மூட்டை கோதுமையையும் அரைத்து மாவாக்கிவிட்டனர். அப்போது ஒருத்தி மற்றவர்களைப் பார்த்து கேட்டாள். ஏனக்கா! பாபாவிற்கு பிள்ளையா? குட்டியா? இவ்வளவு மாவையும் வைத்துக் கொண்டு அவர் என்ன செய்யப் போகிறார்? என்றாள். அதற்கு மற்றொருவள், அப்படியே பாபாவே ரொட்டி செய்து சாப்பிட்டாலும் அவர் சாப்பிடுகின்றதே சிறிதுதான். அதற்கு இவ்வளவு மாவு எதற்கு? பாபா சாப்பிடுகின்ற சாப்பாட்டிற்கு இந்த மாவு இரண்டு வருடத்திற்கு வரும் என்று சிரித்தாள்.

அதற்கு அடுத்தவள், அடிப்போங்கடி பைத்தியங்களா? அவர் ஒன்றும் நாளைக்கு என்று சேர்த்து வைக்கின்ற ஆள் கிடையாது. இந்த மாவை கஷ்டப்பட்டு அரைச்ச நமக்குதான் தரப்போறார். என்றாள். ஆமாம், ஆமாம், பாபாவைப் போன்று ஒரு பரோபகாரியை எங்காவது பார்த்ததுண்டா? உழைப்பவன் வேர்வை பூமியில் சிந்துவதற்குள்



கூலியைக் கொடுப்பவராச்சே! என்றாள் இன்னொருவள்.

சரி! சரி! அரைத்த மாவை நான்கு கூடையில் சமமாக நிரப்பி வைப்போம். பாபா எதுவும் கூறவில்லை என்றால் நாமே எடுத்துக்கொள்வோம் என்றவாறே, திருகையை ஓரத்தில் தள்ளிவைத்து விட்டு மாவை நான்காகப் பிரித்து கூடையில் அள்ள ஆரம்பித்தனர்.

அதுவரை அவர்களது பேச்சையும், செய்கையையும் கண்டும் காணாததும் போல் கவனித்துக் கொண்டிருந்த பாபா, திடீரென ஆவேசம் அடைந்தவர் போல், ஏய்! பைத்தியக்காரிகளே! அது யார் அப்பன் வீட்டு சொத்து என்று நினைத்தீர்கள். நான் உங்களை மாவு அரைக்க கூப்பிட்டேனா? உதவி செய்வதுபோல் வந்து, மாவை திருடப் பார்க்கின்றீர்களா, திருட்டு கழுதைகளே!

கொஞ்சம்கூட கூச்சமே இல்லாமல் துவாரகாமாயிக்கு சொந்தமான பொருளை எடுத்துப்போக முயற்சிக்

கின்றீர்களே, நான் என்ன உங்களிடம் ஏற்கனவே கடன் பட்டிருக்கின்றேனா என்ன? மரியாதையாக நான் கூறுவதை செய்யுங்கள். "நான்கு பிரிவாக எடுத்த மாவை ஆளுக்கு ஒன்றாக எடுத்துக் கொண்டு, நான்கு திசைகளுக்கும் சென்று எல்லையில் கொட்டிவிட்டு வாருங்கள் என்றார்"

இதைக்கேட்டபின்பு நான்கு பெண்களும் வெட்கமடைந்தவர்களாய் தலையை குனிந்துகொண்டு தங்களுக்குள் ஏதோ முணுமுணுத்துபடி மாவை எடுத்துக் கொண்டு ஊர் எல்லையில் தூவுவதற்காக சென்றார்கள். நானும் விடுதிக்கு திரும்பிவிட்டேன்.

மதியம் சற்று ஓய்விற்குப்பின் மாலையில் மசூதிக்குச் சென்றேன். பாபா இல்லை. லெண்டிக்குச் சென்றிருப்பதாக கேள்விப்பட்டேன். நானும் அப்படியே மெல்ல நடந்து ஊருக்குள் சென்றேன். ஊர் முழுக்க பாபா மாவரைத்த செய்தியையே பேசிக்கொண்டிருந்தார்கள். நடந்து நடந்து கந்தோபா ஆலயத்திற்கு வந்துவிட்டேன். அங்கும் சிலர் இதை பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். தூரத்தில் எதைப்பற்றியும் கவலைப்படாமல் வானத்தைப்பார்த்து எதையோ பேசிக்கொண்டிருந்தார் உபாசினி மகராஜ்.

அங்கிருந்த பெரியவர்களிடம் பாபா ஏன் மாவரைத்தார் என்று கேட்டேன். என்னவோ காலராவ வெரட்டணும்னு அரைச்சதா சொல்றாங்க என்றார் ஒருவர். அவரு செய்யறதுக்கெல்லாம் பல அர்த்தம் இருக்கும். நமக்கு என்னென்னு தெரியும் என்றது மற்றொரு பெரிசு.

அதெல்லாம் ஒண்ணும் இல்லைப்பா பாபா இந்த ஊருக்கு வந்ததில் இருந்து பல அற்புதங்களை செஞ்சிருக்காரு. குறிப்பா சொல்லணும்னா, ஒரு நாள் சீரடியிலே பேய் மழை. ஆடு மாடு எல்லாம் தண்ணியிலே அடிச்சுக்கிட்டுப் போவுது. ஊரே மசூதியிலே பாபா எங்களை காப்பாத்துன்னு நிக்குது. பாபா வானத்தைப்பார்த்து கண்டமேனிக்கு திட்டறாரு. உனக்கு மரியாதை அவ்வளவுதான் நிக்க போறியா இல்லையாங்கறாரு. சட்டுனு மழை விட்டுப் போச்சு,

அது மட்டுமா, ஒருமுறை அப்துல்லா துனியிலே நிறைய விறகை போட்டுட்டதால, தீ மளமளன்னு எரிஞ்சு மசூதியின் உத்திரம் அளவுக்கு போயிருச்சு. பாபா தன் சட்காவ எடுத்து தரையிலே ஓங்கி அடிச்சு "அடங்கு" என்று ஒரு வார்த்தைதான் சொன்னார் உடனே தீ தணிஞ்சு ஒரு அடி உயரத்துல எரிய ஆரம்பிச்சுருச்சு.

பஞ்ச பூதங்களையும் தன் ஒரே பார்வையிலேயே தன் கட்டுபாட்டுக்கு கொண்டு வர்றவர். இந்த காலராவ ஒரு பார்வையாலே தடுத்து நிறுத்திட மாட்டாரா? கோதுமை மாவை அரைஞ்சு அதை ஊர் எல்லையிலே கொட்டி இந்த ஊருக்குள்ள காலரா வராம தடுக்க, இவ்வளவு வேலை செய்வாருங்கறத என்னால ஒத்துக்க முடியலே. அதனால இதுக்கு வேறு எதுனா காரணம் இருக்கும்பா என்றார்.

அதுதான் என்ன காரணம் என்றேன் நான். எல்லாத்தையும் நானே சொல்லீட்டா நீ எதுக்கு இருக்கே! யோசன பன்னுப்பா என்று எழுந்து போனது பெரிசு.

எனக்கு குழப்பம் மேலும் அதிகமானது. காலராவுக்கும், கோதுமை

மாவிற்கும் இந்த உலகில் உள்ள ஒற்றுமை என்ன? இவை இரண்டையும் எப்படி இணைக்க முடியும்? இந்த நிகழ்ச்சி என் கற்பனைக்கு எட்டாததாக இருக்கின்றதே! எனக்கு மண்டையே வெடித்துவிடும் போல் இருந்தது.

ஆனால் நான் சீரடிக்கு வந்த இந்த இரண்டு நாட்களுக்குள், பாபா என் மனதிற்குள் சிம்மாசனம் இட்டு அமர்ந்து விட்டார். அவரின் ஒவ்வொரு அசைவும், சிரிப்பும், பேச்சும், கோபமும், நடவடிக்கையும் ஆயிரம் கதைகள் சொல்கிறது. அதற்கெல்லாம் என்ன அர்த்தம் என்று கண்டுபிடிப்பதற்குள் நூறு ஆண்டுகள் ஓடிவிடும் போலிருக்கின்றது.

காலத்தை மீறிய அவரின் பார்வைகளும், சொற்களும் கண்டிப்பாக பதிவு செய்ய வேண்டும். யார் அதை பதிவு செய்வது. ஏன் நானே பாபாவின் வரலாற்றை பதிவு செய்யக் கூடாது. நேற்றைய தினம் பாபாவின் அருகில் அப்துல்லா என்றொருவர் பாபா அவ்வப்போது பக்தர்களுக்கு கூறும் கருத்துக்களை ஒரு துண்டு சீட்டில் எழுதி வைப்பதைப் பார்த்தேன். ஏன் அவைகளை எல்லாம் தொகுத்து பாபவின் வரலாற்றை நாமே எழுதக்கூடாது. என்றவாறே நான் தூண்டப்பட்டேன்.

இவ்விதமாக பாபா மாவரைத்ததை நான் நேரிடையாக பார்த்தன் மூலம் அவரது வரலாற்றை எழுத வேண்டும் என்று ஸ்ரீ சாயிநாதரால் தூண்டப் பட்டதாகவே உணர்ந்தேன். ஆனால் பகுத்தறிவு இல்லாத என்னால் அவ்வளவு பெரிய காரியத்தை ஒரு குறையுமில்லாமல் சாதிக்கமுடியுமா? என்ற கேள்வியும் எனக்குள் எழுந்தது.

– தரிசனம் தொடரும்...

மகாத்மாக்கள்



எதையாவது யோசித்துக் கொண்டே இருப்பது அல்ல ஆன்மீகம்! எல்லா எண்ணங்களையும் பகவான் சாயி பாபாவின் பாதங்களில் ஒப்படைப்பதே ஆன்மீகம்! எண்ணமற்ற மனதைப் பெறுவதற்கே இத்தனை வழிபாடும் பஜனையும், ஜபமும், பாராயணமும்! எந்த ஒரு வேலை செய்தாலும் எண்ணப்பூர்வமாக அல்ல உணர்வுப் பூர்வமாகவே செய்ய வேண்டும்! "நான் செய்கிறேன்!" என்பது எண்ணம்! "நான் இறைவனால் செய்விக்கப்படுகிறேன்!" என்பது உணர்வு!

உணர்வும் உணர்வு சார்ந்த இடமுமே ஆன்மீகம்! "நான் செய்கிறேன்!" எனும் போது தான் வேலையின் பலனை எதிர்பார்க்கிறது மனம்! ஏ.டி.எம் வாசலில் பணியாற்றும் செக்யூரிட்டி போலவே, பணம் இருப்பதால் அந்த ஏ.டி.எம் மிஷினோ, அந்த செக்யூரிட்டியோ கூட லட்சாதிபதி இல்லை! பணம் வைத்திருப்பதால் மட்டுமே உண்மையில் ஒருவரும் இங்கே செல்வந்தர் இல்லை!

அப்படி நினைப்பது நமது கற்பனையே! "பாரமே இல்லை பாபா இருக்கிறார்!" என்று பரம நிம்மதியோடு யாரெல்லாம் அன்றாட பொழுதில் வாழ்கிறார்களோ அவர்கள் மட்டுமே எல்லாவித கோணத்திலும் உயர்ந்த மகாத்மாக்கள்! இப்படி சாதாரண மனிதரை மகாத்மாக்கள் ஆக்குவதே சாயி ஆன்மீகம்!

சாய் தியானாலயாவில் "சாயி லீலா"

இம்மாத பக்த லீலாமிருதத்தில் கோவையைச் சேர்ந்த டி. கார்த்திகேயன் அவர்கள் தான் எப்படி சாயி பக்தனானேன் என்பதையும், தனக்கு ஏற்பட்ட சாயி லீலைகளைப் பற்றியும் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.

என் பெயர் டி. கார்த்திகேயன். தற்போது கோவை பெரியநாயக்கன் பாளையத்தில் வசித்து வருகிறேன். எனக்கு முதன்முதலில் பாபாவைப் பற்றித் தெரியவந்த வருடம் 2008. அதற்கு முன் பாபாவைப் பற்றி எதுவும் தெரியாது என்றாலும், இரண்டு முறை பாபா கோவிலுக்குச் சென்றிருக்கிறேன்.

என் நண்பரை சந்திப்பதற்காக கோவை நாகசாயி ஆலய பேரூந்து நிறுத்தத்தில் காத்திருப்பேன். ஆனால் கோவிலுக்குள் சென்றதில்லை. காரணம் பாபா ஓர் இஸ்லாமியர் என நான் எண்ணியதால். அந்தக் கால கட்டத்தில் தான் சென்னயில் வசித்துவந்த இக்கட்டுரையின் ஆசிரியரும், என் சகோதரியுமான திருமதி. ஜெயந்தி ஸ்ரீராம் அவர்கள், சாயிபாபாவைப் பற்றி எனக்கு எடுத்துக் கூறினார்கள். இருப்பினும் என் மனம் ஏற்கவில்லை.

இருப்பினும் அவர்கள் என்னுடன் பேசும் பொழுதெல்லாம் பலமுறை பாபாவின் அற்புதங்களைப்பற்றி எடுத்துக் கூறினார்கள். அதன்பின்பு தான் பாபாவை வழிபடலாம் என்ற நம்பிக்கையும், தெளிவும் ஏற்பட்டது.



– ஜெயந்தி ஸ்ரீராம்

ஆனால் எனக்கு கடவுள் நம்பிக்கையுடன் மூட நம்பிக்கைகளும் அதிகமாக இருந்தது. அதிலிருந்து வெளி வருவதற்கு மிகுந்த முயற்சி செய்தேன். ஆனால் என்னால் அது முடியவில்லை. அப்போது எனது வயது 25.

பக்தியோடு ஞானம் இருந்தால்தான் ஆன்மீகத்தைப் புரிந்துகொள்ள முடியும் என்று என் மாமா அடிக் கடி கூறுவார்கள். எனவே என் சகோதரியின் ஆலோசனையின்படி எனது தாய் மாமாவான திரு. ஸ்ரீராம் அவர்களையே என் குருவாக ஏற்றுக் கொண்டு ஆன்மீகத்தில் முன்னேற வேண்டும் என்று முடிவு செய்தேன்.

அதன்பின்பு என் குருவின் வழி காட்டுதலின்படி ஆன்மீகத்தைப் புரிந்து

கொள்ள ஆரம்பித்தேன். அவரிடமிருந்து சாயிபாபாவின் கதைகளையும், அவர் புரிந்த அற்புதங்களையும், அவரின் தத்துவங்களையும் அறிந்து கொண்டேன். தினம், தினம் பாபாவின் கதைகளை கேட்டுக் கேட்டு பாபாவை நேசிக்க ஆரம்பித்தேன்.

2008 ல் இருந்து 2010 வரை நான் வேலை நிமித்தமாக சென்னையில் வசிக்க நேர்ந்தது. அது எனக்கு பாபாவால் அமைத்துக் கொடுத்தது. அந்த இரண்டு வருடங்கள் நான் என் குருவின் அருகில் இருந்து தியானம் கற்க உதவியது.

ஆனாலும் என் உறவினரே எனது குருவாக இருந்ததால், குருவைப் பற்றி சரியான புரிதல் இல்லாது இருந்தது. மீண்டும் பாபாவே எனக்கொரு வாய்பை ஏற்படுத்திக்கொடுத்தார். 2010 ஆம் ஆண்டு மீண்டும் கோவைக்கே எனது வேலையை மாற்றி அமைத்துக் கொடுத்தார். அந்த சந்தர்ப்பம் தான் என் குருவைப் பற்றியும், என் வாழ்க்கையைப் பற்றியும் நான் நன்கு உணர்ந்து கொள்ள உதவியது.

குருவின் அருகில் இருக்கும் போது அவர்களைப் பற்றி நான் அறியவில்லை. அவர்களைவிட்டு வெளியே வந்ததும் அவரின் மகத்துவம் எனக்கு புரிய ஆரம்பித்தது. நிழலின் அருமை வெய்யிலில் தெரியும் என்பார்களே அது போல!

இரண்டு வருடங்கள் குருவின் அருகில் இருந்தும் நாட்களை விரயம் செய்து விட்டோமே! என்று என் மனம் தடுமாறியது. இருப்பினும் என் குரு எனக்கு கற்றுக்கொடுத்ததை நான் என் வாழ்க்கையில் கடைபிடிக்க ஆரம்பித்தேன்.

எல்லாவிதமான வழிபாட்டு முறைகளையும் தள்ளிவைத்துவிட்டு முழுக்க, முழுக்க பாபாவின் வழிபாட்டில் கவனத்தை செலுத்த ஆரம்பித்தேன். என் குரு கூறியதைப் போன்று என் வாழ்க்கையிலும் சாயிநாதரின் அற்புதங்கள் ஆரம்பமாயின.

எனது வீட்டில் எனக்கு திருமண ஏற்பாடு செய்ய ஆரம்பித்தனர். ஓர் ஆண்டு முடிந்தும் மணமகள் கிடைக்கவில்லை. என் தாயார் மிகவும் கவலைப்பட்டார்கள். உடனே நான் பாபாவிடம் பிரார்த்தனை செய்தேன். மறுநாள் காலையிலேயே ஒரு பெண் வீட்டார் அவர்களாகவே எங்களை பெண் பார்க்க வருமாறு அழைத்தனர். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. மனதிற்குள் பாபாவிற்கு நன்றி கூறினேன். அந்தப் பெண்ணையே நான் திருமணம் செய்து கொண்டேன்.

திருமணத்தன்று பாபாவின் உருவப்படத்திற்கு முன்பாக தாலிகட்ட வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அது நடக்கவில்லை. திருமணம் முடிந்து சில நாட்கள் கழித்து என் திருமண வீடியோ என் கைக்கு கிடைத்தது. அதைப் போட்டு பார்த்துக் கொண்டிருந்தேன்.

அதில் நான் தாலி கட்டும் போது இறைவன் எங்களை ஆசீர்வதிப்பது போல் எடிட் செய்திருந்தார்கள். அதில் முதலில் விநாயகர், மீனாட்சி, அதன்பின்பு சீரடி சாயிபாபா, மணமக்களை ஆசீர்வதிப்பது போன்று எடிட் செய்திருந்தார்கள். இது எதார்த்தமாக நிகழ்ந்திருந்தது. நான் அதை எதிர்பார்க்கவில்லை. ஆனால் என் மனம் மிகவும் மகிழ்ச்சி அடைந்தது.

அடுத்தடுத்து என் மன தில் இருக்கும் பொறாமை குணம், கோபம், தான் என்ற அகங்காரம் ஆகியவற்றை பாபா மாற்றி அமைத்தார். இதன் மூலம் என் வாழ்க்கை மிகவும் சிறப்பாக மாறியது அடுத்தவர்களுக்கு உதவும் மனப்பான்மையும் மிகவும் அதிகரித்தது.

2008 முதல் ஒவ்வொரு வருடமும் சீரடி சென்று பாபாவை தரிசிக்க வேண்டும் என்று ஆவல் கொண்டேன். அவர் என்னை அழைப்பார் என்ற நம்பிக்கையோடு காத்திருந்தேன். 2014 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அந்த வாய்ப்பை பாபா எனக்கு வழங்கினார். பாபாவை முழுவதுமாக நம்பி நான் தனியாக சென்றதால் என் முதல் பயணம் மிகவும் அற்புதமான அனுபவமாக அமைந்தது.

கோவையில் இருந்து பெங்களூர் சென்று, போக வர ஒரு பேரூந்தில் முன்பதிவு செய்து கொண்டு சீரடிக்குப் பறப்பட்டேன். சீரடி சென்ற பின்பு தான் தெரிந்தது. அன்று பாபாவின் சமாதி தினம் என்று. எங்கு பார்த்தாலும் மக்கள் கூட்டம்.

பாபாவை தரிசிப்பதற்காக வரிசையில் நின்றிருந்தேன்.வரிசையோ நகருவதாக இல்லை.எனக்கு மாலை 5 மணிக்கு பேரூந்து.மணி மதியம் இரண்டை நெருங்கிக் கொண்டிருந்தது. கூட்டம் நகர்வதாக இல்லை. பாபா, சீரடியில் இருந்து திரும்பி ஊருக்குச் செல்ல எனக்கு வேறு வழி தெரியாது. எப்படியாவது உன் தரிசனத்தை சீக்கிரம் முடித்துக் கொண்டு ஏற்கனவே புக் செய்திருக்கி



ன்ற மாலை 5 மணி பேரூந்திலேயே புறப்பட்டுவிட வேண்டும் என்று பாபாவிடம் பிரார்த்தனை செய்தேன்.

சற்று நேரத்தில் கூட்டம் வேக மாக நகர ஆரம்பித்தது.நன் பாபாவை சரியாக 2.35 க்கு தரிசனம் செய்தேன். பிறகு மற்ற வேலைகளை முடித்துக்கொண்டு சரியான நேரத்தில் பேரூந்துக்கு வந்து விட்டேன். அப்போதுதான் நினைத்துக் கொண்டேன். நம்மை அழைத்து வந்தவருக்கு கொண்டு விடத்தெரியாதா? நம்பிக்கையும், பொறுமையையும் இருந்தால் நாம் ஏன் பயப்பட வேண்டும். நான் நம்பிக்கையும், பொறுமையையும் வளர்த்துக் கொண்ட நிகழ்வு அது.

நான் சீரடியில் எனக்கு ஆண் குழந்தை வேண்டும் பாபா என்று பிரார்த்தனை வைத்த அடுத்த வருடமே எனக்கு ஆண் குழந்தையை கொடுத்தார் பாபா. என் குடுத்தினரும் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர்.

அடுத்ததாக என் சகோதரனின் திருமணம். பல தடைகளை தாண்டி, பாபாவின் அருளால் நடைபெற்றது.

திருமணத்திற்கு பாபா வரவேண்டும் என்று மனதிற்குள் மிகப்பெரிய பிரார்த்தனையை வைத்தேன். பின்பு திருமணப் பத்திரிக்கையை சீரடியில் வைத்து ஆசீர்வாதம் வாங்க வேண்டும் என்று பாபாவின் சமாதியில் இருந்த குருக்களிடம் பத்திரிக்கையை கொடுத்தேன். அவரோ பத்திரிக்கையை வாங்கி பாபாவின் காலடியில் வைத்துவிட்டார்.

பத்திரிக்கையை நம்மிடம் திருப்பித் தரவில்லையே என்று மிக வருத்தமாகி விட்டது.உடனே என் குரு ஸ்ரீராம் அவர்களிடம் நடந்ததை எடுத்துக் கூறினேன். அதற்கு என் குரு அவர்கள், கட்டாயமாக பாபா உன் சகோதரனின் திருமணத்திற்கு எந்த ரூபத்திலாவது வருவார். என்று உறுதியாகக் கூறினார்.

அந்த நம்பிக்கையில் நானும் காத்திருந்தேன்.என் சகோதரனின் திருமண நாள் வந்தது. அப்பொழுது என் குரு கூறியது என் ஞாபகத்திற்கு வந்தது. திருமண வேலைகளுக் கிடையே என் கண்கள் பாபாவையே தேடியது. திருமணம் மதுரைக்கு அருகில் உள்ள எங்களது சொந்த கிராமத்தில் எங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள கோவிலில் நடைபெற்றது.

கூட்டம் அதிகமாக இருந்ததினால், திருமணத்திற்கு வந்திருந்த என் குரு அவர்கள் கூட்டத்தை விட்டு சற்று தள்ளி தனியாக நின்றிருந்தார்கள். திருமண நேரம் நெருங்கியதால், என் சகோதரன் தாலியை கையில் எடுத்துவிட்டான்.

எனக்கோ இன்னும் பாபா வரவில்லையே என அழுகை வந்துவிடும் போலிருந்தது. கடைசியாக ஒரு முறை கூட்டத்திற்குள் பாபாவை தேடினேன். சட்டென்று என் உடலும் உள்ளமும் துள்ளிக்குதித்தது. என் குரு நின்று கொண்டிருந்த இடத்தில் பாபா நின்று கொண்டு கைகளை தலைக்கு மேல் உயர்த்தி மணமக்களை ஆசீர்வதித்துக் கொண்டிருந்தார்.

என் கண்களையே என்னால் நம்பமுடியவில்லை. பாபாவை நேரில் கண்டது மிகவும் ஆச்சர்யமாக இருந்தது. என் குரு கூறியபடி பாபா என் சகோதரன் திருமணத்திற்கு வந்துவிட்டார். நான் திரும்பி என் சகோதரனைப் பார்க்க அவன் தாலிகட்டவும் சரியாக இருந்தது.

ஆனந்தத்துடன் மீண்டும் நிமிர்ந்து பார்க்க பாபா நின்றிருந்த அதே இடத்தில் என் குரு நின்றிருந்தார். என்னே பாபாவின் அனுக்கிரகம். என் குருவின் மூலமாக தன்னை வெளிப்படுத்திக் கொண்டு எங்களை ஆசீர்வதித்ததை நினைத்துப் பார்க்கும் போது மனம் மெய் சிலிர்க்கின்றது.

சாயி மகராஜ் குருவை தேடி புத்தகத்தின் முதல் வெளியீட்டு விழாவிற்கு நான் வந்த போது புத்தக வெளியீட்டின் சார்பாக, பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்க என் குரு அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். அன்று ஞாயிற்றுக் கிழமை. புத்தக வெளியீடு முடிய சற்று நேரமாகிவிட்டபடியாலும் மதியம் இரண்டு மணிக்கு மேலாகிவிட்டதாலும் அன்னதானத்திற்கு கூட்டம் வரவில்லை. நாங்கள் உணவு அண்டாவுடன் தயாராக நின்றிருந்தும் அன்னம் வாங்க ஒருவர் கூட வரவில்லை.

சிறிது நேரம் போயிருக்கும். மே மாத கொளுத்தும் வெய்யிலில் ஒரு வயதானவர் பார்ப்பதற்கு சற்று

நாங்கள் அவரை சாப்பிட அழைத்தோம். அவர் எங்களை நிமிர்ந்து பார்த்தார். கண்கள் இரண்டும் நெருப்புத் துண்டுகள் போல் இருந்தன. மெல்ல எங்களை நோக்கி வந்தவர் நாங்கள் கொடுத்த உணவு தட்டை வாங்கி அதில் இருந்த உணவை இரண்டே தடவையில் விழுங்கினார்.

அப்படி அவர் உண்ணும் போது அவரின் நாக்கு நெஞ்சுவரை நீண்டு வெளியே வந்தது எங்கள் அனைவருக்கும் அது பயத்தை ஏற்படுத்தியது. ஆனால் நாங்கள் தொடர்ந்து அவரை கவனிக்க முடியாமல் எங்கிருந்துதான் அவ்வளவு கூட்டம் வந்ததோ தெரியவில்லை அடுத்த அரை மணி நேரத்தில் அத்துணை உணவும் தீர்ந்து போயிற்று.

அதன் பிறகு அவரை எங்களால் காண முடியவில்லை. இவை எல்லாம் பாபாவின் செயல் அல்லாது வேறு என்னவாக இருக்கும். 2014 முதல் இன்று வரை ஒவ்வொரு வருடமும் சீரடி சென்று தரிசனம் செய்யும் வாய்ப்பையும் பாபா எனக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றார்.

நான் பணிபுரியும் நிறுவனத்தின் மூலம் வெளிநாடு சென்று வரும் யோகத்தினையும் எனக்கு பாபா வழங்கினார். எனது இன்பம், துன்பம் அனைத்திலும் பாபா நீக்கமற நிறைந்து என்னை அடுத்தடுத்த நிலைக்கு முன்னேற்றி இருக்கின்றார்.

காலம் உள்ள வரை எனக்கு பாபாவை அறிமுகப்படுத்திய என் சகோதரிக்கும், பாபாவைப் பற்றிய ஞானத்தை எனக்குள் புகுத்திய என் குருவிற்கும் என்றென்றும் நான் நன்றியை தெரிவித்துக் கொண்டே இருப்பேன்.

குரு வாழ்க! குருவே துணை!



உள்+ கட

அடுத்தவர்களைப் பற்றி நம்மைப் பேசச் சொன்னால், நாள் கணக்கு போதாது! ஆனால் நம்மைப் பற்றி யாரேனும் பேசச் சொன்னால் திணறுகிறோம்! காரணம், நமக்குள் நாம் இன்னும் பயணிக்கவில்லை! நமது ஆன்ம அறை திறக்கப்படாமல் தூசி படிந்து கிடக்கிறது! அவர் என்ன சொல்வார் ? இவர் என்ன சொல்வார்? என்ற கவலையே நம்மை செயற்கைத் தனமாக வாழ வைக்கிறது!

இயந்திரதனமான சிரிப்பையே நமது உதடு சுமக்கிறது! நமக்குள்ளே ஆனந்தம் இல்லை! மனம் கூட சிறிது நேரம் கிடைக்கும் ஆன்மீகச் சிற்றின்ப த்தை நோக்கியே அலைகிறது! கோவிலுக்குச் சென்றாலும் பூஜாரிகளால் நாம் கௌரவிக்கப்பட வேண்டும் என்று அகந்தை கொள்கிறது மனம்! நம் பேச்சையே அனைவரும் கேட்க வேண்டும் என்று திமிறுகிறது எண்ணம்!

கோவில் சந்நிதான அதிர்வலைகளை விடவும், ஆன்மீக சாதனைகளை விடவும், வெளியே நிகழும் பாராமுகமே வருத்தம் ஏற்படுத்துகிறது! ஏன்? நாம் இன்னமும் உள்ளே பயணிக்கவே இல்லை! எப்போதும் வெளியே வெளியே வெளியேதான்! அன்பே உள்ளே பயணிக்க வைக்கிறது! அப்படி உள்ளே பயணிக்கும் போதுதான் உற்சவ மூர்த்தியான இறைவன் சாய்பாபா கருவறைக் கடவுளாகக் காட்சி அளிப்பார்.

SOUNDS GOOD

BOOK FOR EVENTS

LIGHT MUSIC ORCHESTRA

Wedding | Birthday | Corporate Get together Events







- Light Music
- Karaoke
- Instrumental Music
- DJ Music

www.soundzgood.in

95 66 16 76 80

saai_archana_vr

SOUNDSGOOD Musically the best

SoundsGood Music Group

தனம் மசாலா

சாம்பார் மசாலா, தனி மிளகாய் பொடி, மஞ்சள் பொடி, பிரியாணி மசாலா, கரம் மசாலா மற்றும் தரமான மசாலா தயாரிப்புகள்.



சுத்தமான, தரமான, வீட்டுத் தயாரிப்பு,கலருக்கும், சுவைக்கும் ரசாயனம் சேர்க்கப்படவில்லை.

தனம் மசாலா, NO: 2/13, புதுத் தெரு, திருநீர்மலை, சென்னை– 44. போன்: 9080599587.

ஸ்ரீ சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம் அமைப்பதற்கு உங்களது மேலான ஆதரவை நாடுகிறோம். காணிக்கை அளிக்க விரும்பினால்,



"சாயி தியானாலயா"

ஜிபே எண்: 99418 16692

மேலும் விபரங்களுக்கு திரு.அகஸ்டின் 97103 33503)

– ஸ்ரீ சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம்
அமைப்புக் குழு சென்னை 23.

S. SHANTHI
Insurance Consultant
LIC0375871D

I.T. ரிட்டேன், GST ரிட்டேன்,
அக்கவுண்ட மெயிண்டனஸ்,
ROC பைலிங், TAX பைலிங்.

No: 5, Mandaveli, Chennai - 600028.

E- Mail: Shanthisiva23@Gmail.com
Cell: 98409 07345, 94457 17217

பற்று


பற்று என்பது பிடித்துக் கொள்வது! உடம்பின் கைகளால் பிடித்துக் கொள்வதல்ல. மனதின் கைகளால் பிடித்துக் கொள்வது!

தனக்கே உடைமை என்று மனம் உரிமை கொண்டாடுவதே பற்று! பற்று, ஆசை என்ற இன்னொரு பெயரையும் கொண்டிருக்கிறது! பக்கத்து வீட்டுப் பிள்ளைக்கு ஏதாவது ஒன்று என்றால் ஒரு நிமிடம் கவலைப்பட்டு பிறகு உணர்ச்சிவசப்படாமல் அதனை அணுகுவது அன்பின் எதார்த்தம்!

ஆனால் அதே நம் வீட்டுப் பிள்ளைக்கு ஏதாவது ஒன்று என்றால் துடித்துப் போவது பற்று! அவர்கள் தன் ரத்தம் என்கிற கற்பனை! கரு என்பது ஒரு பாத்திரமே, அதில் ஆன்மாவை நிரப்புவது இறைவனே! குழந்தைகள் இந்த உலகத்தில் வருவதற்கு பெற்றோர்கள் ஒரு வாசல் மட்டுமே!

அவரவர் கர்ம வினைக்கு ஏற்ப பெற்றோர்கள்,சுற்றம்,சூழல் குடும்பம், உறவு, வேலை, அமைகின்றன! மனம் எதையாவது ஒன்றைப் பிடித்துக் கொள்ள, பிடித்துக் கொள்ள,கவலை பிடித்துக் கொள்கிறது! மனதின் பிடிப்பு மேலும் இறுக்கமாக, இறுக்கமாக, அமைதி,நிம்மதி,திருப்தி போன்ற மனிதனுடைய இறை குணங்களின் குரல்வளை நெறிக்கப்படுகிறது!

மனதை சுமந்து கொண்டே நிம்மதியைத் தேடுவது என்பது பூனையை மடியில் கட்டிக் கொண்டே சகுனம் பார்ப்பது போல் அபத்தமானது! எப்போது பிடிமானம் விடுகிறதோ, மனதிலிருந்து நாம் விடுதலை அடைகிறோம்! நாமே நமக்குச்



சொந்தமில்லை! ஆன்மாவாகிய நாமே கர்ம காரணத்திற்காக இறைவனால் இந்த பூமியில் அனுப்பப்பட்டவர்கள்!

நமது மறுபிறவிகள் என்பது அரியர்ஸ் தேர்வு எழுதுவது போல்! தோற்றுத் தோற்று எழுதிக் கொண்டிருக்கிறோம்! பூமி எனும் கிரகத்திற்கான உரிமையாளரும் நாம் இல்லை! அப்படி இருக்கையில் பற்று என்பது வெறும் கற்பனை அல்லவா? உண்மையில் எதார்த்தத்தை விட கற்பனை மிகவும் ஆபத்தானது!

“நிம்மதியை நாளைக்கு ஒத்திப் போட்டுவிட்டு இன்றைக்கு நாம் கவலைப் படுகிறோம்”! இது எவ்வளவு அறியாமை என்பதை நாம் உணர்வ தில்லை! எதுவும் சொந்தமில்லை என்ற ஆன்மீக உணர்வு தான் முக்கியம்! எ

ப்போது மனம் என்ற விலங்கு ஒரு சுமை என்னும் விழிப்புணர்வு ஏற்படுகிறதோ அப்போதே பற்றில் இருந்து நாம் விடுதலை அடைகிறோம்! நாம் பற்றில் இருந்து விடுதலை அடையும் தினமே இறைவன் சாயிபாபாவிடம் உண்மையில் நாம் பக்தி செலுத்த ஆரம்பிக்கும் சுப தினமாகும்.

சீரடி சாயிநாதரின் புகழ் பரப்பும் மாத இதழில் விளம்பரம் செய்து சாயிநாதரின் ஆசியைப் பெற்று உங்களது வியாபாரத்தில் மேன்மேலும் வளர்ச்சியடையுங்கள்.



அன்பிற்கினிய சாயி சொந்தங்களே!

உங்களது நிறுவனங்கள், தயாரிப்புகள், மற்றும் உங்கள் வீட்டு பிறந்தநாள், திருமணநாள், விஷேசங்கள், தொடர்பான விளம்பரங்களை குறைந்த செலவில் வண்ணத்தில் பிரசுரித்து பயனடையுங்கள்.

குறைக்கப்பட்ட கட்டணங்கள்

பின் அட்டை கலர் முழுபக்கம் – ரூ.3000
நடுப்பக்கம் கலர் முழுபக்கம் – ரூ.2000
நடுப்பக்கம் கலர் அரைபக்கம் – ரூ.1000
கறுப்பு/ வெள்ளை முழு பக்கம் – ரூ.1500
கறுப்பு/வெள்ளை அரைபக்கம் – ரூ.750

குறிப்பு: சாயி சொந்தங்களுக்குள் திருமண பந்தத்தில் இணைய விரும்பும் மணமக்களுக்காக "வரன் தேவை" அரை பக்க வண்ண விளம்பரம் ரூ.500 மட்டுமே!

"ஸ்ரீ பாத ராஜம் சரணம் ப்ரபத்யே"

சமர்த்த சத்குரு வீரடி சாய் மஹராஜின் க்ருபையாலும், கலியுக பரிபூரண தத்த அவதாரியான, ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் அனுக்கிரகத்தினாலும், கலியுகத்தில் இருந்து மீண்டும் சத்ய யுகம் உருவாக ஸ்ரீ வல்லபர் மீண்டும் அவதாரம் செய்து, உயிர்கள் அனைத்திற்கும் நல்லருள் பொழிந்திட, சுவாமியின் நாம ஜபம் ஒன்றே முழுமையான பாதுகாப்பு கருவியாகும்.



"தீகம்பரா தீகம்பரா ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப தீகம்பரா"

"தீகம்பரா தீகம்பரா ஸ்ரீ சக்ரதத்தாத்ரேயா தீகம்பரா"

– எனும் சக்தி வாய்ந்த நேர்மறை ஆற்றலைக் கூட்டும் மாமந்திரத்தை தினமும் "108" முறையாவது ஜபம் செய்து, எதிர்மறை சக்தியின் தாக்கத்தில் இருந்து தற்காப்பு பெற்றிடுவோம் வாருங்கள் நண்பர்களே!

"ஜய ஜய ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா"

விபரங்களுக்கு; **சுந்தர்சாய், 9789404451**

தகுதிக்கு மீறியதை வேண்டாதீர்கள்!

யாருக்குமே தகுதிக்கு மீறிய ஆசை இருக்கக் கூடாது. அப்படி ஆசை வந்துவிட்டால், தகுதியை வளர்த்துக் கொண்ட பிறகே ஆசை கொள்ள வேண்டும். அளவுக்கு மீறிய எதுவுமே நஞ்சுதான்.



ஒரு நாட்டின் ராஜா தினமும், ரோஜா மெத்தையில் படுத்து உறங்கி சொகுசான வாழ்க்கை வாழ்ந்து வந்தார். அந்த ரோஜா மெத்தையை அலங்கரிக்கிற வேலையை வேலைக் காரன் ஒருவன் செய்து வந்தான். அவனுக்கு ஒரு ஆசை, நாம் எப்படியாவது இந்த மெத்தையில் படுத்து தூங்க வேண்டும் என்று நினைத்தான்.

அப்படியே ஒருநாள் அந்த ரோஜா மெத்தையில் படுத்து உறங்கியும் விட்டான். அங்கே திடீரென வந்த ராஜா அவன் தனது மெத்தையில் படுத்துறங்குவதைப் பார்த்து விட்டார். உடனே காவலாளரை அழைத்து, அந்த வேலைக்காரனை சவுக்கால் அடிக்கக் கட்டளை இட்டார். ஆனால் சவுக்கடி வாங்கிய அவன் வாய்விட்டு சிரித்தான்.

அதைக் கண்டு ஆச்சரியப்பட்ட ராஜா, ஏன் சிரிக்கிறாய் எனக் கேட்டான். அதற்கு அந்த வேலைக்காரன் என்னுடைய தகுதிக்கு தகுந்தபடி வாழக் கற்றுக்கொள்ளாமல், ரோஜா மெத்தையில் ஒரே ஒருநாள் படுத்து விட்டேன். நான் ஒருநாள் படுத்ததற்கே இவ்வளவு அடி கிடைத்தால் தினந்தோறும் இந்த மெத்தையில் படுக்கிற உங்களுக்கு எவ்வளவு அடி கிடைக்குமோ! அதை எண்ணிதான் சிரித்தேன் என்றானாம்.

1915ம் ஆண்டில் அப்துல்காதர் என்ற பக்தர் பாபாவிடம் மிகுந்த பக்தி கொண்டிருந்தார். அதனால் அவர் எப்போதும் பாபாவின் சேவையிலேயே மூழ்கிப் போய், ஷீர்டியிலேயே தங்கி பாபாவிற்கு தொண்டு செய்து கொண்டிருந்தார்.

ஒருநாள் அவர் பாபாவிடம் சென்று, "பாபா ! நான் எப்பொழுதும் தங்களையே நினைத்து நினைத்து உருகி தொழுது கொண்டிருக்கிறேன்.

தங்களுடைய சேவையிலேயே என்னுடைய வாழ்நாள் நேரம் முழுவதும் செலவழிக்கிறேன். அதற்கு ஈடாக உங்களுடைய சக்தியில் ஒரு பகுதியை எனக்களித்து என்னை மகானாக்க வேண்டும் பாபா!" என்று கெஞ்சினார்.

பாபா சிரித்துக் கொண்டே, "அப்துல்! அதற்கான பக்குவம் உனக்கு இன்னும் வரவில்லை ! அதனால் பேராசைப்படுவதை நிறுத்து!" என்று கூறினார். ஆனாலும் அப்துல் காதர் விடுவதாக இல்லை.மீண்டும் மீண்டும் பாபாவை நச்சரித்தார்.

பாபாவும் ஒருமனதாக யோசித் தவராக, தன் கைகளை மூடிக் கொண்டு வானத்தை நோக்கி ஏதோ முணுமுணுத்தபடி, அப்துலை நோக்கி கைகளை வீசுவதுபோல் வீசினார். பாபா கையில் ஒன்று மில்லை. ஆனால், அப்துல் மட்டும் "தனக்குள் ஏதோ ஒன்று இறங்கியதை உணர்ந்தார்.

அதுநாள் முதல் அப்துல்காதர் ஷீரடிக்கு வந்த ஜனங்களுக்கு நீதி போதனைகளை சொல்ல ஆரம்பித்து விட்டார். திடீர் திடீரென எல்லோரையும் கண்டபடி திட்டினார். கல்லால் அடிப்பதாக பயமுறுத்தினார். தனக்குத்தானே எதை எதையோ பேசியும் உளறிக் கொண்டும், பி

த்துப் பிடித்தவரைப் போல் எல்லோரிடமும் நடந்து கொண்டார். அப்துலின் இந்த செய்கைகளால் ஒன்றரை மாதங்களாக சீரடி மக்கள் பெரிதும் அவதிப்படுவதை பாபா



உணர்ந்தார்.

ஒருநாள் அப்துல் காதரை மசூதிக்குள் வரும்படி அழைத்த பாபா, தன் மூடிய கைகளை அவர்முன் நீட்டி, "லாவ் பாலே இடார்" என்று கூறியபடி தன் பக்கம் இழுத்தார்.இப்போதும் பாபாவின் கைகளில் ஒன்றும் இல்லை. ஆனால், ஏதோ ஒன்று தன்னிடமிருந்து வெளியேறுவதை அப்துல் உணர்ந்தார்.

அதன்பின் அப்துல்காதர் தன் இயல்பு நிலைக்கு திரும்பி சாதாரணமாகி விட்டார். "தன் தகுதிக்கு மீறிய வேண்டுதலை பாபாவிடம் வைத்தது மிகப்பெரிய தவறு" என்பதை அந்த நொடியில் உணர்ந்த அப்துல், பதினைந்து நாட்கள் கழித்து பூனாவுக்குச் சென்று ஒரு பீடிக்கடை வைத்து வாழ்க்கை நடத்தி பிழைத்துக் கொண்டார்.

செம்பருத்தி

செம்பருத்தி தாவரத்தில் அமிலங்கள், குளுக்கோசைடுகள், ரிபோபிளேவின், கரோட்டின் என பல வேதிப் பொருட் கள் காணப் படுகின்றன. சித்தர்கள் செம்பருத்தியை தங்க பஸ்பத்திற்கு ஈடாக கூறுகின்றன. இதனால் இதை தங்க புஷ்பம் என்று அழைக்கின்றனர்.

செம்பருத்தி தாவரத்தின் வேர், இலை, மொட்டு, பூ எல்லாமே மருத்துவ குணம் நிறைந்ததுதான். இதன் இலைகள் தசைவலியைப் போக்குவதோடு தசையை மிருதுவாக்கும் தன்மையும் கொண்டவை.

செம்பருத்தி இலையின் சாறு தலைவழுக்கை மற்றும் கூந்தலைக் கறுப்பாகவும் உதவுகிறது. மலர்கள் குளிர்ச்சி பொருந்தியவை. சருமத்திற்கு இதமும், சுகமும் அளிப்பவையாகும். கூந்தல் வளாச்சிக்கான தைல தயாரிப் பில் இலைகளும், பூக்களும் பெரும் பங்கு வகிக்கிறது.

மாதவிடாயைத் தூண்டக் கூடியது. இலைகளை அரைத்து குளிக்கும் பொது ஷாம்பூ மாதிரி உபயோகிக்கலாம். உடலுக்கு குளிர்ச்சி. முடிக்கு நல்லது. இதழ்களின் உள்ள சாறு சிறுநீர்ப் போக்கு வலியை நீக்கும். இனப்பெருக்க உறுப்பு நோய்களுக்கும் மருந்தாகிறது.

காலை எழுந்ததும் 5 முதல் 6 பூக்களின் இதழ்களை மென்று தின்று சிறிது நீர் அருந்தி வர வயிற்றுப் புண் ஆறும். வெள்ளைப் படுதல் நிற்கும். இரத்தம் சுத்தமாகும். இதயம் வலுப்பெறும். 400 மில்லி நல்ல எண்ணெயில் 100 கிராம் செம்பருத்தி இதழ்களைப் போட்டு கலந்த பாத்திரத்தை மெல்லிய துணியால் மூடிக் கட்டி பத்து நாட்கள் வெயிலில் வைத்து காலை மாலை எண்ணெயை கலக்கிவிட்டு மூடவும். பிறகு எண்ணெய்யை வடிகட்டி சம அளவு தேங்காய் எண்ணெய் கலந்து பத்திரப்படுத்திக் கொண்டு தைலத்தை



தினமும் தலையில் தேய்த்து தலை வாரி வரவும். இது ஒரு சிறந்த கூந்தல் தைலம்.

இப்பூக்கள் இதயக் கோளாறையும், கர்ப்பக் கோளாறையும் நீக்க வல்லது. செம்பருத்திச் செடி வீட்டில் இருந்தால் ஓர் மருத்துவர் இருப்பதற்குச் சமம். பெண்கள் வீட்டுக்கு விலக்காகும் காலத்தில் அதிக உதிரப் போக்கு இருந்தால் இரண்டு, மூன்று மலர்களை நெய்யில் வதக்கிக் உண்டால் குணமாகும்.

காய்ந்த மலர் இதழ்கள், வெட்டி வேர், துளசி விதைகளை, சுத்தமான தேங்காயெண்ணெயில் ஊறவைத்து தலைக்குத் தேய்த்து வர பேன், பொடுகு அகலும். ஐந்து செம்பருத்திப் பூவைக் கொண்டு வந்து ஒரு லிட்டர் நீர் விட்டுப் பாதியாகச் சுண்டக் காய்ச்சி எடுத்துவைத்துக் கொண்டு குடிநீருக்குப் பதிலாக, இதனைப் பயன்படுத்தலாம். இதனால் உடல் உஷ்ணம் குறைஞ்சுடும். சாதாரண காய்ச்சலுக்கும் இந்த நீரைக் குடித்து நிவாரணம் பெறலாம்.

பூவினை அதிகாலையில் மட்டும் வெறும் வயிற்றில் சாப்பிட்டுவிட்டு ஒரு டம்ளர் பசுவின் பால் சாப்பிட வேண்டும். இதுபோன்று நாற்பது நாட்கள் அதிகாலையில் மட்டும் சாப்பிட்டு வந்தால் கடுமையான நோய் இருந்தாலும் குணமாகும்.

செம்பருத்திப் பூவை 250 கிராம், 50 கிராம் எலுமிச்சம் பழத்தின் சாறை அதில் பிழிந்துவிட்டு கலக்கி, காலையில் வெயிலில் வைக்கவும். பின்னர் அதனை பிசைந்து வரும் சாற்றோடு, சர்க்கரையைச் சேர்த்துக் காய்ச்சி சர்பத் செய்து வடிகட்டி, காலை, மாலை இரு வேளைகளிலும் ஒரு ஸ்பூன் எடுத்து 2 அவுன்ஸ் நீரில் கலந்து குடித்து வந்தால் இரத்தம் சீரான முறையில் பரவும். இருதயமும் பலம் பெறும்.

செம்பருத்திப் பூக்களைப் பறித்துத் தலையில் வைத்துக் கட்டிக் கொண்டு இரவு படுத்துக் கொள்ளவும். இதுபோன்று மூன்று, நான்கு தடவைகள் செய்தால் தலையிலுள்ள பேன்கள் ஒழிந்துவிடும்.

இழப்புகளே ஞானம்

வாழ்வில் இழப்புகள் இன்றியமையாதவை! இன்றைய நாளை இழந்தால் தான் நாளை என்பதே இன்றைய நாளாக முடிகிறது! இழப்புகளை ஏற்றுக் கொள்ள தயார்ப்படுத்துவதே சாயி ஆன்மீகம்! எந்த இழப்புகளையும் ஏதாவது ஒன்று இட்டு நிரப்பும்! தனிமையை நிரப்பும் ஒரு பாடல் போல், உடல் மரணத்தை ஆன்மாவுக்கு இட்டு நிரப்பும் மறு ஜென்மம் போல், எது ஒன்றும் வேறொன்றாக உருமாறுகிறது!

இழப்புகளே ஒருவருக்கு ஞானம் தருகிறது! பெற்றுக்கொண்டால் உலகம் வரும். ஆனால் இழந்தால் தான் ஞானம் வரும்! பெறுவது கூட சிக்கல்களை உருவாக்குகிறது ஆனால் இழந்து கிடைக்கிற ஞானமோ பரம நிம்மதியை மட்டுமே தருகிறது! வீடுகள் அற்ற வெட்ட வெளியில் தான் காற்றே சுதந்திரமாக உலா வர முடிகிறது!

உறவுகளில் மனதை இழந்து விட்டு இடியாப்பச் சிக்கலில் இதயத்தை விட்டுவிடுகிற போதே கற்பனைக் கட்டுகள் நம்மை இறுக்குகின்றன! ஆனால் தியானத்தில் மனம் இழந்து போகிற போது இந்த உலகம் தரமுடியாத உன்னத சுகத்தை முதன்முறையாக ஆன்மா அனுபவிக்கிறது!

ஆகவே இழப்புகளே நிரந்தனமானவை! பெறுவது வெறும் தற்காலிகமே! அருளோ அதுவே வந்து நம்மைப் பிடித்துக் கொள்கிறது, ஆனால் பொருளோ நம்மால் பிடித்து வைக்கப்படுகிறது! அதுவாக பிடித்தது நம்மை விடுவதே இல்லை! நாமாக பிடித்து வைத்திருப்பது தான் நம்மை விட்டுப் போய்விடுகிறது!

வாசகர் குரல்

நான் சாயி மகராஜ் குருவைத்தேடி வாசகி என்பதில் பெருமைப்படுகிறேன். இதழில் வருகின்ற அனைத்துப் பதிவுகளும் மிகவும் அருமையான பதிவுகள். இம்மாதத்தில் ஆசிரியர் அவர்கள் எழுதத் தொடங்கியிருக்கும் சாய் சரிதத்தை மிகவும் ஆவலோடு எதிர்பார்க்கிறேன்.

–திருமதி.சாய் பிரவீணா, சேலம்.

முதல் பக்கம் திறந்ததுமே சாயியின் அமுத மொழியே எனக்கு ஆத்ம நிம்மதி. ஆசிரியரின் சாய் சரிதத்தில் மூழ்க ஆரம்பித்துவிட்டேன். அகமாற்றம் பெட்டிச்செய்தி என் வாழ்க்கையில் ஏற்பட வேண்டும் என்று பாபாவை வேண்டுகிறேன். சாயியின் பெருங்கருணையால் இந்த புத்தகம் கையில் இருப்பதே பெரும் அதிர்ஷ்டம். வாழ்க ஆசிரியர்! வளர்க சாயி தொண்டு!.

– திருமதி.ப. இந்துமதி, அயனாவரம்–23

குருவே துணை. சென்ற இதழில் பக்கம் 35 ல் வெளிவந்த அகமாற்றம் என்ற தலைப்பில் நீங்கள் எழுதியிருந்த பெட்டிச்செய்தி, என்ன நானே சோதித்துக் கொள்வதற்கு மிகவும் அவசியமானதாக இருந்தது. என்னை நானே சோதித்துக் கொண்டேன்.

அருமை குருவே! மிக்க நன்றி!

– திரு.கருணாமூர்த்தி. சென்னை23.

சகோதரி ஜெயந்தி ஸ்ரீராம் அவர்கள் எழுதும் சாயி லீலா தொடர், ஒவ்வொரு மாதமும் மனதிற்கு ஆறுதலாகவும், ஆனந்தமாகவும் இருக்கிறது. சாயி லீலாவில் எனது அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ள ஆவலாய் உள்ளேன்.

– செல்வி. தனுஷா. விருதுநகர்.



கலியுகத்தின் கண்கண்ட தெய்வமான சீரடி சாயிநாதரின் புகழ் பாடும் இதழாக வெளிவந்தாலும், ஏனைய பக்தி, ஞான செய்திகளையும் வெளியிடுவது மிகவும் சிறப்பு.

– திரு. புலவர். கதிரேசன். திண்டுக்கல்.

திருவள்ளுவர் பற்றிய கட்டுரை சிறப்பு. சாயி பற்றிய செய்திகள், கதைகள், அனைத்தும் அருமை!

– திருமதி. மாலதி. காரைக்கால்.

சாய் மகராஜ் குருவைத்தேடி ஆன்மீக மாத இதழ் பல விதமான மலர்கள் சேர்ந்த மலர்க்கொத்து. கட்டுரைகள் பல தலைப்புகளில் இருந்தாலும், அதில் பொதிந்திருக்கும் கருத்துகள் அனைத்துமே ஆன்ம ஞானத்தை நோக்கியே இட்டுச் செல்வதுதான் இந்த புத்தகத்தின் சிறப்பு.

வாழ்க வளமுடன்!

– திருமதி.மாதங்கி பாலாஜி,
கீழ்பாக்கம், சென்னை.

இமாதம் புத்தகத்தை திறந்த உடன் என் கண்களில் பட்டது அக மாற்றம் பெட்டிச்செய்தி! என்னை நானே சோதித்துப் பார்க்க ஒரு அருமையான கண்ணாடி! மாதா மாதம் நமது இதழின் வெளிவரும் செய்திகள் அனைத்தும் மிகவும் அருமை. இந்த இதழ் அனைத்து சாயி பக்தர்களின் கைகளிலும் சென்று சேர வேண்டும் என்பதே சாயிநாதரிடம் எனது வேண்டுதல்.

– திருமதி. லதா பாஸ்கரன்.
அண்ணாநகர். சென்னை.

சுந்தர்சாய்ராம் அவர்கள் எழுதும் "திருவருள்தேடி" எனது பழைய துபாய் வாழ்க்கையை ஞாபகமூட்டுகிறது. மாதம் ஒரு சீவ சமாதி தரிசனத்தை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

– திரு. ஜீவரத்தினம். சோழபுரம்.

அன்பிற்கினிய எனது குருவும், இதழின் ஆசிரியருமான திரு. ஸ்ரீராம் அவர்களுக்கு, சாய் சரிதம் தொடரில் உங்கள் பார்வையில் எங்களுக்கு நீங்கள் நேரில் கூறிய கதைகளையும் எழுத்தில் கொண்டுவருவீர்கள் என்று ஆவலோடு காத்திருக்கின்றோம்.

– திரு. குமரன். பாலக்கரை, திருச்சி.

அமுத மொழி அற்புதமான பாபாவின் சுய முன்னேற்றத்திற்கான பொன் மொழிகள். அமுத மொழியை மட்டும் தனிப்புத்தகமாக கொண்டு வந்தால் பலருக்கு ஊக்கமளிப்பதாக இருக்கும்.

– திரு. பாலச்சந்திரன். திருவள்ளூர்.

வாசகர்கள் தங்களது மேலான கருத்துக்களை "வாசகர் குரலில்" பதிவிட, கீழ்கண்ட வாட்ஸ் அப் நம்பருக்கு எழுதி அனுப்பும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

வாட்ஸ் அப் எண்:
9941816692.

இறையை உணரும் "சிவராத்திரி"

ஏன் சிவராத்திரியில் கண் விழிக்கிறோம் எனில், மிகப் பெரிய பௌதீக மாற்றம் நமக்குள் நிகழும் என்பதால் தான்! இந்த பூமி சுற்றுகிறது, சுற்றுகிற போது அதிர்வலைகள் ஏற்படுகின்றன! மற்ற கிரகங்களும் சுற்றுகின்றன அதிர்வலைகள் ஏற்படுகின்றன!

டைனமோ சுற்றுவது போல் கிரகங்களின் சுற்றுதல்! டைனமோவில் டயர் தீண்டுகிற போது, அந்தச் சூட்டில் முன்புற விளக்கு எரிகிறது, அதுபோல் தெய்வீக அதிர்வலைகளை நம் உடம்பு வாங்குகிற போது, தவச் சூட்டில் நமக்கு ஆன்ம ஞான வெளிச்சம் ஏற்படுகிறது! ஆம்! சிவராத்திரி தின இரவில் ஏராளமான தெய்வீக அதிர்வலைகள் பூமியில் இறங்குகின்றன!

இது இரவு நேர்கிற பிரம்ம முகூர்த்த நேரம் எனலாம்! கிரகண நேரம் இதற்கு நேர் மாறானது! எதிர்மறை அதிர்வலைகள் ஏற்படுவதால் அதை தடுக்க ஜப, தவங்கள் புரிகிறோம்! சிவராத்திரி இரவில் நேர்மறை அதிர்வலைகள் எழும்.ஆகவே அதை நம் உடம்பு எனும் கிண்ணத்தில் ஏந்த விழிப்புணர்வோடு நிமிர்ந்து அமர்ந்து அகப் பயணம் புரிதல் அவசியம்! விழிப்பதல்ல விஷயம். விழிப்புணர்வே மிகவும் முக்கியம்!

நமது உடலும் ஆன்மீக முன்னேற்றத்துக்கான கருவியாக மாறிடும் மாபெரும் வாய்ப்பை சிவராத்திரி இரவு தருகிறது! மனம் அடங்கும் தெய்வீக அதிர்வலைகள் காற்றுத் தேர் ஏந்தி நம்மைத் தீண்டுகின்றன! அந்த நேரத்தில் உடலை அசையாமல், முதுகுத் தண்டை நேராக வைத்துக் கொண்டு கண்களை மூடினால், வராத தியானம் எல்லாம் இதய வாசல் தேடி உள்ளே நுழையும்! தியானம் நுழையும் நொடியே இறைவன் பாபாவை உணரும் நொடி!

ஒருமை, பணிவு

கலியுகத்தின் கண்கண்ட தெய்வமான சீரடி சாய் பாபாவின் போதனைகளில், அவரை பின்பற்றுபவர்களுக்கு அளிக்கும் மிக முக்கியமான பாடம், ஏகத்துவம், மற்றும் பணிவு பற்றிய போதனைகளே!

பாபா தன்னை நாடி வரும் பக்தர்களிடையே ஒருபோதும் வேறுபாடு கண்டதில்லை.

அவர் அனைவருக்குமான பணிவான சேவகனாகவும், தன் மக்களுக்கு அடிமையாகவும் பணியாற்றி, பணிவின் உன்னதமான வடிவத்தை வெளிக்காட்டினார். "நான் உங்கள் மலத்தில் நெளியும் புலு" என்ற அவரது சாஸனாம்ருத திருமொழியே அதற்கு சாட்சி!



ஜவாஹர் அலி என்ற சுயநல குரு ஒருவர் சீரடிக்கு வந்து நானே உனது குரு எனக்கூறியபோது, எவ்வித எதிர்ப்பும் காட்டாமல் உடனடியாக அடிபணிந்தார். அங்கே பாபாவின் பணிவு எடுத்துக்காட்டப்பட்டது. பாபா ஒரு உண்மையான முஸ்லீம் செய்வதைப் போல, அவருக்கு பல்வேறு வழிகளில் சேவை செய்தார்.

பின்னர், ஜவாகர் அலி பாபாவின் உண்மையான மதிப்பை உணர்ந்து தன்னை மன்னிக்கும்படி பாபாவின் காலில் விழுந்தார். ஆனால் பாபா, தனது மென்மையான இதயத்துடன், அவரிடம் அன்பாகவே நடந்து கொண்டார். ஜவாகர் அலி அவரை நடத்திய நிகழ்விற்காக சிறிதும் வருத்தப்படவில்லை.

எல்லா உலகத்திலும், அனைத்து விதமான இயற்கையையும் வெறும் கை அசைவால், அல்லது தன் கண் அசைவின் மூலம் கட்டளையிட வல்லவர், ஒரு போலி குருவிடம் தனது எதிர்ப்பைக் காட்டாமல் சீடனாக பணியாற்றி, உன்னதமான பணிவுடன் வாழ்ந்தார்.

கடவுளின் பணிவு, பாபா எடுத்துக் காட்டியது, நம் அனைவருக்கும் சக்திவாய்ந்த பாடம். கடவுளால் இவ்வளவு பணிவாக இருக்க முடியும் என்றால், நம்மால் ஏன் முடியாது? பாபாவுக்கு முன் எந்த தகுதியும் இல்லாத நாம், அவரோடு ஒப்பிடக்கூட தகுதி சுஷ்யற்ற, அகங்காரத்துடன் வாழ்கிறோம்.

நாம் அனைவரும் ஒரே இறைவனால் படைக்கப் பட்டவர்கள் என்பதை நினை வில் கொள்ள வேண்டும், நாம் அனைவரும் அவனது பார்வையில் சமம். நாம் நமது அகங்காரத்தை விட்டுவிட்டு பாபா நிகழ்த்திய முன்னுதாரனமான நடத்தையை பின்பற்றி வாழ வேண்டும்.

"எதைப்பிடித்தாலும் இறுக்கிப்பிடி" என்ற அருள் மொழியின்மூலம் சாயி ஒரு முகப்பட்ட சிந்தனையான "ஏகத்துவத்தை" மிக அழுத்தமாக போதிக்கிறார்.

"உள்ளது ஒன்றே! அதுவே பலவாக தெரிகிறது" என்ற பேரண்டத்தின் பேருண்மையை நமக்கெல்லோருக்கும் கடவுள் ஒருத்தர் தான் என்ற வார்த்தை களின் மூலம் மெய்யாக் குகிறார்.

ஒருமுகப்பட்ட சிந்தனையோடு வாழ்வது என்றால், நாம் அனைவரும் பிரபஞ்சத்தின் ஒரு பகுதி, ஒரே கடவுளால் உருவாக் கப்பட்டோம் என்பதை அங்கீகரித்து உணர்ந்து கொள்வது. பாபா செய்தது போலவே நாம் பிறரையும் கருணை, மரியாதை, பணிவுடன் நடத்த வேண்டும். நாம் மற்றவர்களை விட சிறந்தவர்களாக வோ,அல்லது மோசமானவர்களாகவோ பார்க்காமல், கடவுளின் சமமான பிள்ளைகளாகவே பார்க்க வேண்டும்.

பாபாவின் நித்திய அன்பை பாது காக்க, நாம் அகங்காரம் இல்லாமல் வாழவும், பணிவு, அன்பு, மற்றும் பிறருக்கு சேவை ஆகிய அவரது போதனை களைப் பின்பற்றவும் வேண்டும். பாபா நமக்கு கற்றுத் தந்தபடி நம்மை பிரிக்கும் சுவர்களை நாம் உடைத்தெறிய வேண்டும்.

முடிவில், கடவுளின் பணிவு, பாபாவால் வெளிப்படுத்தப்பட்ட சக்திவாய்ந்த பாடமாகும். நாம் நமது அகங்காரத்தை விட்டுவிட்டு பாபாவின் ஒருமைப்பாடு, பணிவு மற்றும் சேவை ஆகிய போதனைகளைப் பின்பற்ற வேண்டும்.



இவ்வாறு செய்வதன் மூலம் பாபாவின் நித்திய அன்பைப் பாதுகாத்து, அகங்காரத்தின் கட்டுப் பாடுகளில் இருந்து விடுபட்டு ஒரு உன்னதமான வாழ்க்கையை வாழ முடியும். நாம் அனைவரும் அகங்காரத்தை விடுத்து வாழ பாடுபடுவோம். சர்வ வல்லமை மிக்க கடவுள் பாபாவின் முன்னுதாரணமான நடத்தையை பின்பற்றுவோம்.

தொடர் –34

சாய் சரவணன்

"அதி தேவதை"

பாபாவை சாவடி ஊர்வலத் திற்கு தயார்படுத்துவதற்காக தாத்யாவும், மகல்சாபதியும் மசூதிக்கு வந்தனர். ராதாகிருஷ்ணமாயியின் வழி காட்டுதலின் பேரில் சாவடி ஊர்வலம் புறப்படத் தயாரானது.

பாபாவிற்கு ஆயியால் தரப்பட்ட பொன்னால் ஆன எம்ப்ராய்டரி வேலை செய்யப்பட்ட பட்டு சால்வையை தாத்யா பாபாவின் மேனியில் பேரன்போடு சாத்தினார். பிறகு பாபாவிடம் சாவடிக்குச் செல்லலாம் வாருங்கள் என மகல்சாபதியோடு சேர்ந்து அன்போடு அழைக்க, பாபா புன்முறுவல் பூத்த வதனத்தோடு எழுந்து நின்றார்.

பின்னர் பாபா துனியில் இருக்கும் விறகு கட்டைகளை தன் வலது கால் கட்டைவிரலால் சிறிது இழுத்து, வலது கையால் எரியும் விளக்கை அனைத்து விட்டு புறப்பட ஆயத்தம் ஆனார். பாபா மசூதியின் படிக்கட்டில் தன் காலை வைக்கும்முன், கட்டியம் கூறும் காவலர்கள் பாபாவின் முன் நின்று முதன்முதலாக ஆயியால் பயிற்றுவிக்கப்பட்டபடி, "அனந்த கோடி பிரமாண்ட நாயக ராஜாதி ராஜ யோகிராஜ பரப்பிரம்ம ஸ்ரீ சச்சிதானந்த சத்குரு சாயிநாத் மஹராஜ்கீ ஜெய்" என கம்பீரமாக ஜெய கோஷம் செய்தனர். இந்த ஜெய கோஷம் பாபாவின் அடியவர்களுக்கு பேரின்பத்தை தந்தது.

சாயி மகராஜ் மசூதியில் இருந்து புறப்படும் போது ராஜாவின் முன்



பதாகைகள், வெண்பட்டு குடையும் பிடிக்கப்பட்டது. பக்தர்கள் சிறு கொடி களைப் பிடித்துக்கொண்டு முன் நடக்க, பாபாவை தாத்யா, மகல்சாபதியும் பிடித்துக்கொள்ள மெல்ல சாவடி ஊர்வல வைபவம் தொடங்கிற்று.

தீவட்டி பிடிப்போரின் ஒழுங்கான வரிசையும், அந்த தீப ஒளியின் வெளிச் சத்தில் அதிசுந்தரமான ஸ்ரீசாயிநாதர் மகாசக்ரவர்த்தியைப் போல் நடந்துவர, பக்தர்கள் பாபாவின் மேல் பூக்களை தூவ, ஹரியின் நாமமும், பாபாவின் ஜெயகோஷமும் முழங்க, இன்னிசை தாளங்களின் ஓசை திக்கெட்டும் பரவ, பாபா சீரடியின் வீதிகளின் வழியே மெல்ல நடந்து வருகிறார்.

மாருதி கோவிலின் அருகே வந்த உடன் திடீரென மாருதியைப் பார்த்து ஆனந்தமாக ஏதோ சமிக்ஞை செய்கிறார். இந்த அழகான செய்கையையும், ஊர்வலத்தையும் கண்டு, சீரடி மக்களும், பாபாவின் அடியவர்களும் ஆனந்தத்தில் மூழ்கினர். மகல்சாபதியோ, இப்படிப்பட்ட ஊர்வலத்தைக்கண்டு பக்தியின் உச்சத்திற்குச் சென்று தன்னை மறந்து, பக்தர்களுடன் சேர்ந்து ஆட ஆரம்பித்து விட்டார்.

ஊர்வலம், பஜனை, நாமகோஷம், பக்தர்களின் ஆரவாரம்,எல்லாம் கிராமத்தின் வழியே மெல்ல நகர்ந்து சாவடியின் அருகே வந்து சேர்ந்தது. இக்காட்சியில் பாபாவின் திருமுகம் என்றும் காணாத அளவிற்கு சூரியனின் பிரகாசம் போல் மின்னியது.

இவை அனைத்தையும் ஏற்பாடு செய்த ஆயியோ, சாவடிக்கு எதிரில் இருக்கும் தன் இல்லமான சாலாவின் உள்ளிருந்து பாபாவை பிரேமையோடு நோக்கினாள். அதே நேரம் பாபா ஆயிக்கு விட்டலனாக தரிசனத்தை தந்தார். அன்னையோ ஆனந்தத்தில் மூழ்கிப்போனாள். உண்மையில் பாபா வேறு விட்டலன் வேறு அல்லவே!

சாவடி வாசலில் ஊர்வலம் நின்றது மீண்டும் பாபாவிற்கு கட்டியம் கூறுவோர் ஜெயகோஷம் செய்தனர். பாபா அமரும் இடத்தில் ஆயி ஒரு திண்டை ஏற்பாடு செய்திருந்தாள். சாவடியின் உள்ளே சென்ற பாபா திண்டின் மேல் அமராமல் ஒரு கோணிப்பையை விரித்து அதன் மேல் அமர்ந்தார்.

பிறகு பாபாவிற்கு சாமரசம் வீசினர். பக்தர்களின் அன்பிற்கு கட்டுப்பட்டவர் போல பாபா அமைதியின் ரூபமாக காட்சியளித்தார். அடியவர்கள் பாபாவின் அருகில் அமர்ந்து, பாபாவிற்கு ஆயியால் சமர்ப்பிக்கப் பட்ட சிலிம்மை தயார் செய்தனர்.

பாபா சிலிம்மை பிடித்துவிட்டு தாத்யா, மகல்சாபதிக்கு தந்தார். பிறகு பாபாவிற்கு பட்டு சால்வை போர்த்தப்பட்டு, பூமாலை சமர்பித்து, தூப தீபம் காட்டி, நிவேதனம் செய்தனர்

பாபா ஆயியால் பிரேமையோடு அனுப்பப்பட்ட உணவுகளை பிரியத் தோடு ஏற்றார். பிறகு பீடாவை உண்டார். பக்தர்கள் தங்களது மனம் நிறைவடையும் வரை பாபாவை தரிசித்தனர். அன்னை ஆயியோ சாவடியின் வெளியில் நின்று அனைத்தையும் ரசித்துக் கொண்டிருந்தாள்.

பாபா அனைவரையும் வீட்டிற்குச் செல்லும்படி உத்தரவிட்டார். அடியவர்களும் பாபாவின் திருவடியை வணங்கி திரும்பச்சென்றனர். பாபாவின் சாவடி ஊர்வலத்தின் அனுபவத்தை வியந்து பேசியபடி அனைவரும் தத்தமது இல்லத்திற்குச் சென்றனர். சாவடியில் ஆயியால் லாந்தர் விளக்கு ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அப்துல்லா அதில் எண்ணை நிரப்பி விளக்கு ஏற்றினார்.

பிறகு பாபா ஏகாந்த சித்தத்துடன் மகாராஜாவைப்போல் சாவடியில் சயனித்தார். அன்றுமுதல் சாவடி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இடமாக மாறிப்போனது. ஒருவழியாக ஆயியின் எண்ணப்படி சாவடி ஊர்வலம் எந்த விக்கினமும் இன்றி சிறப்பாக நடைபெற்று முடிந்தது.

உண்மையில் அன்னையின் சங்கல்பத்தை பாபாவே ஆசீர்வதித்து நிறைவேற்றினார். அன்று முதல் இன்றுவரை சாவடி ஊர்வல வைபவம் சிறப்பாக நடைபெறுகிறது. சாவடி



ஊர்வலத்தின் சிறு குறிப்புகள் கபர்டே டைரியில் காணப்படுகின்றன.

காகா மஹாஜனியிடமும், பயாந்தர் கோவர்த்தனதாஸ், என்பவரிடம் நம் இராதாகிருஷ்ணாயி பாபாவிற்கு தேவையான விளக்குகள், குளோப் கண்ணாடிகள், மற்றும் திருத்தி அமைக்கப்பட்ட சாவடி அறையினை அழகுபடுத்த திரைச்சீலைகளும், கட்டியம் கூறுபவர்களுக்குண்டான புதிய சீருடைகளும், சாமரம் மற்றும் விசிறிகளும் கேட்டாள். ஆயி கேட்டபடி அனைத்து பொருட்களும் 23.11.1911 அன்று ஆயியிடம் ஒப்படைக்கப்பட்டது. ஒப்படைக்கப்பட்ட பொருட்கள் சாவடிக்கும், அடியார்களுக்கும் பயன்படுத்தப்பட்டது.

இராதாகிருஷ்ணமாயி ஆரம்பித்து வைத்த சாவடி ஊர்வலத்தைப் பற்றி திரு. கபர்டே பெரிதும் வியந்து கூறுகிறார். சாவடியின் அலங்காரம், திரைச்சீலைகள், சரவிளக்குகள், இவற்றைக்கண்ட கபர்டே, " என்னால் இதைப்போல பரிசுகளை பாபாவிற்கு தர இயலுமா? என தனக்குத் தானே கேட்டுக்கொண்டு, மேலும் கூறினார்.

சாவடி ஊர்வலம் மனதிற்கு மிகவும் இனிமையாக அமைந்தது. நான் அவைகளை கண்டு ரசித்தேன். வியந்தும் போனேன். இவ்விதமான விலையுயர்ந்த வெகுமதிகளை நான் எனது சக்தி கொண்டு செய்ய இயலாது. இது எத்தகைய பரிதாபம். ஆனால் ஆயி தனி ஒருத்தியாக சாதித்துவிட்டாள். கடவுள் மிகப் பெரியவர். என்று கூறினார்.

இவ்வாறு கபர்டே இராதா கிருஷ்ணமாயியின் சேவையைப் பற்றி வியந்து பாராட்டுகிறார். ஆனால் இத்தகைய பார்ட்டுகளை எல்லாம் ஆயி ஒவ்வொரு நொடியும் சாயி நாதருக்கே அர்பணித்துவிடுவாள். சாவடி ஊர்வலம் முடிந்த பின்பு, ஆயியின் சேவைகளைப் பற்றி வரும் அத்தியாயத்தில் காணலாம்.

–தொடரும்...

எலைட் எண்டர்பிரைசஸ்

தொப்பம்பட்டி பிரிவு, HDFC பேங்க் அருகில், MTP ரோடு,
கோயம்புத்தூர் - 641 017. செல்: 98434 40806

Authorized Distributor: GS Caltex

Authorized Dealer:
Castrol | SERVO | MAK LUBRICANTS | Shell Lubricants | MOTUL | AMARON | SF SONIC

GST No: 33BMOPS1392A1Z3

ELITE ENTERPRISES









GS Caltex
Castrol

P.Sivasaravanan B.E.,
98434 40806

Products

- Automobile Engine Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

ELITE ENTERPRISES

All Two Wheeler & 4 Wheeler Batteries Available Here

SF SONIC
AMARON









HOME UPS AVAILABLE

ஆட்டோ மொபைல் ஆயில், இண்டஸ்ட்ரியல் ஆயில், க்ரீஸ், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள், வீட்டு உபயோக UPS, பேப்பரிகள் கிடைக்கும்.

தொடர் – II

சுந்தர்சாய்

திருவருள் தேடி

ஓம் சாய்ராம்.

சமர்த்த சத்குரு சாய் பகவான் திருவடிகளை வணங்கி நமது சாய் அன்பர்களை சிரம் தாழ்த்தி வணங்கி "திருவருள் தேடி" பயணத்தை தொடர்வோம். சென்ற இதழில் தொழில் சம்பந்தமாக செய்த களப்பணியில் ஜார்ஜியா நாட்டில், எமக்கு ஏற்பட்ட அனுபவங்களையும், ஆரம்பத்தில் ஏற்பட்ட தடைகளையும் பகவான் சாயி பகவான் எவ்வாறு நீக்கி எமக்கு அருள் புரிந்தார் என்பதை பகிர்ந்து கொண்டோம்.

அங்கு எமக்கு சரியான மொழி பெயர்பாளர் கிடைப்பதில் இருந்த சிரமத்தையும் சாய் பகவான் எங்கனம் தீர்த்து வைத்தார் என்பது பெரும் வியப்பே! அங்கு சாயி பகவானின் துணையை மட்டுமே நம்பி நாம் களப்பணியில் ஈடுபட்ட சமயம் ஒரு அற்புதம் நிகழ்ந்தது.

முதற்கட்ட தகவல்களை சிரமப்பட்டு தேடிபிடித்தபின் அடுத்தகட்டத்தை நோக்கி நகர வேண்டுமானால் நம்பிக்கையான மொழிபெயர்ப்பாளர் அவசியம் தேவை. அந்நாட்டில் மருந்து விற்பனை செய்யும் முதல் இடத்தில் இருக்கும் இரண்டு கம்பெனிகளை தேர்வு செய்தாகிவிட்டது.

அவர்களுக்கு நமது தயாரிப்புகளை புரியவைத்து, "புரிந்துணர்வு ஒப்பந்தம்" செய்ய வேண்டியிருந்தது. அந்த



நேரத்தில் நம் சாய் பகவான் திருப்பு முனையாக நமக்கு உதவியதை இன்றும் யாம் நினைவு கொள்கிறோம்.

எதிர்பாராதவிதமாய்

நமது தமிழ்நாட்டில் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த சிவக்குமார் என்னும் மருத்துவக்கல்வி பயிலும் மாணவரின் அறிமுகம் கிட்டியது. அவரும் பழகுவதற்கு நல்ல நண்பராக இருந்தார். அதுமட்டுமின்றி ரஷ்ய மற்றும் ஜார்ஜிய மொழிகளை சரளமாக பேசக்கூடியவராக இருந்தார்.

சாய்பகவானின் தேர்வு என்றால் என்ன என்பதை உணர்ந்து சந்தோசத்தின் உச்சிக்கே சென்ற தருணம் அது. ஆம்.. நண்பர்களே! முற்றிலும் பழக்கமில்லாத ஓர் அத்வானத்தில் கண்ட ஒளிக்கீற்றைப் போல் எம்மை

மிகவும் இலகுவாக உணர வைத்த அனுபவம் அது.

சிவக்குமாரின் துணையோடு மருந்து கம்பெனி எம்.டி யை சந்தித்து ஒரு மிக நல்ல வணிக உறவை ஏற்படுத்திக் கொள்ள முடிந்தது. அவரது பெயர் கோச்சா 40 வயது இளைஞர். இந்த சந்திப்பிற்கு முன்பே எனது களப்பணிகளை அவரது நண்பர்களின் மூலம் அவர் அறிந்து வைத்திருந்தார்.

மொழி தெரியாத வெளிநாட்டவர் தன்னந்தனியாக, இந்தளவிற்கு எல்லோரையும் சந்தித்து தகவல்களை சேகரித்துள்ளாரே என்று என் மீது அவருக்கு பெருமதிப்பு ஏற்பட்டிருந்தது. கூடுதலாக சிவக்குமாரின் மொழிப் புலமையும் கை கொடுத்தது. எனவே எங்களது முதல் சந்திப்பிலேயே திரு. கோச்சா அவர்கள், இனி உங்களது தேவைகள் அனைத்தையும் நானே கவனித்துக் கொள்கிறேன் மிகவும் கனிவுடன் தெரிவித்தார்.

நம் புதிய வணிகக் கூட்டாளி திரு. கோச்சா மிகவும் துடிப்பு மிக்கவர் மட்டுமின்றி அவரது வியாபாரத்திலும் பல திறமையானவர்களை இணைத்து ஒரு வெற்றிக் கூட்டணியை அமைத்திருந்தார். அவருக்கு என்னை மிகவும் பிடித்துவிட்டபடியால், எம்மை ஒரு பார்ட்டிக்கு அழைத்தார்.

இதற்கிடையில் நாம் தங்கியிருக்கும் இடத்தைப்பற்றி தெரிந்து கொண்டு, அங்கிருந்து பாதுகாப்பான ஒரு தங்கும்விடுதிக்கு எம்மை மாற்றினார். அவருடைய ஓட்டுனர் பயமுறுத்தக் கூடிய உடற்கட்டுடன் கூடிய மெய்க்காப்பாளர்.நம்மை அவரும் மிகவும் பாதுகாப்புடனும், மரியாதையுடனும், நட்புடனும் கவனித்துக்கொண்டார்.

எல்லா இடங்களுக்கும் அவருடன் எம்மையும் அழைத்துச்செல்வதில் மிகவும் ஆர்வமாக இருப்பார். அவரது பெயர் "மிஷா" குழந்தை மனம் கொண்ட அவர் நாம் அன்போடு கொடுக்கும் ஒரு சாக்லேட் பார்





பரிசிலேயே மகிழ்ந்திருவார்.

நண்பர் கோச்சா நம்மை இரவு சுமார் 9 மணிக்கு அவருடைய பார்ட்டிக்கு அழைத்துச் சென்று அவரது நண்பர்கள் 22 பேர்கள் கொண்ட குழுவிற்கு எம்மை அறிமுகம் செய்து மிகவும் பாரட்டிப் பேசியதுடன், அன்று அவரது பிறந்தநாள் என்றும், எமது நட்பு அவருக்கு கிடைத்த பிறந்தநாள் பரிசு என்றும் சிலாகித்துப்பேசியது எம்மை மிகவும் நெகிழ வைத்தது.

இவை எல்லாம் எமக்கு சத்ய சாயி பாபாவின் ஆசியால் கிடைத்த அங்கீகாரம் எனும் போதுதான் எவ்வளவு ஆனந்தம். இந்நிகழ்ச்சி நடந்து 15 வருடங்கள் ஆகிவிட்ட போதிலும் அவரை நான் இன்று சந்திக்க நேர்ந்தாலும் அதே மாதிரியான வரவேற்பை காணமுடியும்.

கோச்சா ஒரு சாதாரண மனிதர் இல்லை.மிகுந்த செல்வம், செல்வாக்கு, மற்றும் பெரிய ஜரோப்பிய, ஜெர்மனி அமெரிக்க கம்பெனிகளுடன் வியாபாரம் செய்யும் வெற்றியாளர்.

இருப்பினும், அந்த மருந்து கம்பெனிக்கு அங்கு நல்ல அறிமுகம் இல்லை என்பதும், எமக்கு முன் அங்கு பொறுப்பில் இருந்தவர் பொருப்பற்ற முறையில் பல பிரச்சினைகளை உருவாக்கி விட்டு சென்றிருக்கின்றார்.

எமக்கு கிடைத்த ஆன்மீக பலத்தை பயன்படுத்தி பிரட்சனை இருந்த இடங்களுக்கெல்லாம் நேரடியாகவும், தொலைபேசி மூலமாகவும் அடிக்கடி தொடர்பு கொண்டு எல்லோருடைய மனதிலும் ஒரு நல்ல அபிப்ராயத்தை ஏற்படுத்த முடிந்தது. எமது சொந்த அனுபவத்தில், பிரட்சனைகளுக்குப் பயப்படாமல், ஓடி ஒளியாமல், அங்கேயே தங்கியிருந்து பொறுமையுடனும், பொறுப்புடனும் செயல்பட்டதால் எல்லா விஷயங்களையும் சமாளிக்க முடிந்தது.

அங்கு அரசாங்கத்தில் மருந்துகள் பர்மிட் செய்யும் துறையின் இயக்குனர் நமக்கு அன்புடன் உதவி செய்து கட்ட வேண்டி பாக்கி, பீஸ், எல்லாம் முறையாக கட்ட வைத்து உதவினார். இவ்வாறு சென்ற இடமெல்லாம் எமக்கு நல்ல நட்பான உறவுகளை ஏற்படுத்திக் கொடுத்து, எமது தன்னம்பிக்கையை மிகப்பெரிய அளவிற்கு உயர வைத்த நம் சாயிக்கு பல கோடி நன்றிகள்.

இவ்வாறு சவாலான வேலையை வழங்கிய சாயி பகவான் கூடவே இருந்து என்னை வழிநடத்தி அருளியதோடு, நடந்த சம்பவங்கள் அனைத்தும் வாழ்க்கை பாடமாக கற்றுக்கொடுத்த கருணை அபாரமான ஒன்று. சாயி நினைந்திருந்தால் எந்த வெற்றியையும் ஓர் விநாடியில் அருளிவிட முடியும்.

ஆனால் அவை நமக்கு வாழ்க்கை கல்வியை கற்றுத்தர தவறிவிடும்.

நம்மாலான முழுமுயற்சியையும் செய்ய வைத்து, அதில் நாம் சோர்வடை யும் பொழுது உடனுக்குடன் தோள்கொடுத்து நாம் இன்னும் எவ்வளவு நேர்மையாகவும், கடினம ாகவும் உழைக்க வேண்டும் என்று அறிவுறுத்தும் அற்புதப்பாடம் அல்லவா சாய் பகவானின் பாடம்.

வெளிநாட்டிலும் வேலை செய்யும் கம்பெனியிலும் நல்ல பெயரையும், நன்மதிப்பையும் பெற்றுத்தந்ததோடு, தாய் நாட்டில் எம் குடும்பத்தையும் எந்த விதப் பிரச்சனையும் இன்றி கவனித்துக்கொள்ளும் அளவிற்கு மனநிம்மதியை கொடுத்த சாய் பகவானின் இறையன்பை அளவிட என்ன வழி?

பல தடைகளைத் தாண்டி நாம் பயணிக்கும் போது நம் நெஞ்சம் வலுவடைந்து, எந்த குறுக்கு வழியிலும் பயணிக்காமல் நேர்மையாக உழைப்பது மட்டுமே நமது கடமை. அதை சரியாக செய்துவிட்டால் நம் தேவை அறிந்து துணை நிற்கும் இறைச்சக்தி நமக்கு எல்லா நலன்களையும் அளித்துக் காக்கும் என்பது எனக்கு கிடைத்த "சாயி கியாரண்டி"

நாம் இறையருளால் ஜார்ஜியாவில், ஒரு புது வியாபார ஒப்பந்தத்தை பெற்று அங்கு நமக்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்கியதும், இங்கிருக்கும் பம்பாயில் உள்ள அதிகாரிகள் உன்னிப்பாக கவனித்து ஒரு திட்டத்தை வகுத்தனர். கம்பெனியின் நலன் கருதியும், செலவினங்களை குறைக்கும் முகமாக எம்மை மும்பைக்கு மாற்றல் செய்து, இந்திய சம்பளத்தின்படி எமது மாத வருமானத்தை குறைக்க திட்டம் வகுத்தனர்.

ஆனால் எமது பொருளாதார நிலை இன்னும் ஒரு நிலையானதாக இல்லாத பட்சத்தில் இந்த முடிவு எனக்கு கவலையளித்தது. இதுவரை நாம் ஜார்ஜியாவில் உறுதியான கட்டமைப்பை ஏற்படுத்தி விட்டபடி யால், தொலைவில் இருந்தே வியாபாரத்தை நடத்திக்கொண்டு எமது சம்பளத்தை குறைத்து கம்பெனியின் வருமானத்தை பெருக்கவதாக திட்டம்.

இப்படி முடிவு செய்ததும் எமக்கு விடுமுறை அளித்து ஹைதராபாத் செல்ல விமான டிக்கெட் வழங்கப் பட்டது. நீண்ட நாட்களுக்குப் பின் குடும்பத்தாருடன் இருக்கப் போகின்றோம் என்ற ஆனந்தத்தை முழுமையாக அனுபவிக்க முடியாதபடி, அடுத்து அவர்கள் என்ன திட்டம் போடுவார்களோ என்ற கவலை என்னை ஆட்கொண்டது.

எல்லாம் அவன் செயல் என எமக்கு திட நம்பிக்கையை உறுதிப்படுத்திய அனுபவத்தை அடுத்த இதழில் வாசிக்கலாம் விறுவிறுப்பான திருப்பங்களுடன். குரு வாழ்க! குருவே துணை! எல்லாம் சாயி! எல்லாமுமே சாயி!

– தொடரும்.

சாயிமகராஜ் குருவைதேடி
இணையத்தில் படிக்க...
www.saidhyanalaya.org

சாய் தியானா
வாட்ஸ் அப் நம்பர்
99418 16692

சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் "காலக்ஞானி"ஸ்ரீ வீர பிரம்மேந்திரரின் ஆத்ம சீடர் "ஸ்ரீ சித்தையா சுவாமிகளின் வரலாற்றை அறிந்துகொண்டு அவரின் சீவ பீடத்தை தரிசிப்போம் வாருங்கள்.

ஸ்ரீ சித்தையா சுவாமிகள்

ஆந்திர மாநிலம் கடப்பா மாவட்டத்தில் உள்ள முதுமாலா கிராமத்தில் வாழ்ந்து வந்த இஸ்லாமிய தம்பதியினரான, பீர்சாகிப்ஆதம்பி தம்பதியின ருக்கு மகனாகப் பிறந்தார். சுவாமிகளின் இயற்பெயர் சையத் என்பதாகும்.

குடும்பத்தினர் அவரை சித்தையா என்று அன்போடு அழைத்துவந்தனர். சித்தையா பிறந்ததில் இருந்து அவர்களது குலத்தொழிலான மெத்தை தயாரிக்கும் தொழிலில் அவரது தந்தை சிறந்து விளங்கினார். குடும்பமும் செழிப்புடன் வாழ்ந்து வந்தது.


பீர்சாகிப் சித்தையாவை பள்ளியில் சேர்த்தார். ஆனால் சித்தையாவிற்கு படிப்பிற்கு பதில் தெய்வ பக்தியே மிகுதியாய் இருந்தது. எனவே தனது 14 வது வயதில் தனது ஊருக்கு அருகில் இருக்கும் கந்திமல்லையப்பள்ளியைச் சேர்ந்த ஸ்ரீ வீரபிரம்மேந்திர சுவாமிகளைப் பற்றி கேள்விப்பட்டு அவரிடம் சீடனாக சேரும் பொருட்டு வீட்டில் ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டு விட்டார்.



கந்திமல்லையப்பள்ளி வந்து ஸ்ரீ வீரப்பிரம்மேந்திரரை சந்தித்து அவரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி தன்னை சீடனாக ஏற்றுக்கொள்ளும்படி மன்றாடினார். சுவாமிகளும் தனது ஞானதிருஷ்டியால் சித்தையாவின் பூர்வீகத்தை அறிந்து கொண்டு சித்தையாவை தனது சீடனாக ஏற்றுக்கொண்டார்.

அதே நேரம் பீர்சாகிப் தனது மகனைக் காணாமல் பல இடங்களில் தேடி அலைந்தார். இறுதியில் கந்திமல்லையப்பள்ளியில் ஸ்ரீ வீரபிரம்மேந்திரரிடம் சீடனாக உள்ள





செய்தியைக் கேள்விப்பட்டு, அங்கு வந்து தன் மகனை வீட்டிற்கு வருமாறு அழைத்தார்.

ஆனால் சித்தையாவோ, தனது ஞான குருவை விட்டு வேறு எங்கும் வரமாட்டேன் என்று உறுதியாகக் கூறிவிட, பீர்சாகிப் சுவாமிகளிடம் சென்று முறையிட, ஸ்ரீ வீரபிரமேந்திரர் சித்தையாவை அழைத்து தந்தையுடன் செல்லுமாறு கூறினார்.

சித்தையாவோ தனக்கு நீங்கள்தான் அனைத்தும், உங்களைவிட்டு நான் எங்கும் செல்ல மாட்டேன் என்று மறுக்க, பீர்சாகிப் சுவாமிகளிடம், அவன் எங்களுடன் வர மறுக்கிறான். எனவே அவனது விருப்பம் போல் அவனை உங்களிடமே ஒப்படைக்கிறேன். நீங்களே அவனை பார்த்துக்கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு ஊர் திரும்பினார்.

காலப்போக்கில் சித்தையாவை தனது ஆத்ம சீடனாக ஏற்றுக்கொண்ட ஸ்ரீ வீரபிரம்மேந்திரர், சித்தையாவிற்கு குரு உபதேசம் செய்துவைத்தார். இதைக்கண்ட சுவாமிகளின் மகன்களான கோவிந்தையாவும், புட்லூரய்யாவும், மகன்களான தங்களுக்கு இத்தனை ஆண்டுகளாக கிடைக்காத குரு உபதேசம், வேறு மதத்தைச் சேர்ந்த சித்தையாவிற்கு கிடைத்துவிட்டதே என்று கோபம் கொண்டனர்.

தனக்கு எவ்வளவு எதிர்ப்பு வந்த போதிலும் தனது குரு வழிபாட்டை விடாது தொடர்ந்தார் சித்தையா. சதா சர்வ காலமும் தன் குருவின் காலடியிலேயே அமர்ந்திருப்பார். தற்போது வீர பிரமேந்திரரின் புகைப்படத்திலும் அவரது பாதங்களில் சித்தையா அமர்ந்திருப்பதைக் காணலாம். ஸ்ரீ வீரபிரமேந்திரர், சித்தையாவின் மேல் தன் மகன் கள் கொண்ட கோபத்தினை மாற்ற சில சோதனைகளை நடத்தினார்.

ஒரு நாள் நள்ளிரவு ஒரு இறந்த நாயின் சடலத்தை சீடர்கள் தங்கியிருக்கும் குடிலில் மறைத்து வைத்தார்.ஓரிரு நாட்களில் இறந்த நாயின் உடலில் இருந்து கடுமையான துர்நாற்றம் வெளி யேற தொடங்கியது நாற்றம் பொறுக்கா மல் சீடர்கள் மூக் கைப் பொத்திக் கொண்டு இறந்த நாயை கண்டுபிடித்து வெளியே கொண்டு வந்தனர். அப்போது அங்கே வந்த ஸ்ரீ வீரப்பிரம்மம்,



ஸ்ரீ சித்தையாசுவாமிகளின்
குடும்ப உறுப்பினர்கள்
ஜீவசமாதிகள்

சீடர் களே, உங்களில் யாராவது இந்த இறந்துபோன நாயை முழுமையாக உண்பீர்களேயானால், அவர்களுக்கு, முக்காலமும் உணரும் ஞானமும், ஞான திருஷ்டி போன்ற அனைத்து நன்மைகளும் கிடைக்கும். யார் தயாராக இருக்கின்றீர்கள் என்றார்.

அப்போது அங்கிருந்த சீடர்கள் யாரும் முன்வரவில்லை. உடனே சுவாமிகள் சித்தையாவை அழைத்துவரச் செய்து, அவரிடம், சித்தையா, இந்த இறந்து போன நாயை முழுமையாக உண்டு இந்த இடத்தை சுத்தப்படுத்துவாயாக என்று கூறியதுதான் தாமதம், ஏன் எதற்கு என்று கேள்வி கேட்காமல் உடனடியாக, தனது குருவை மூன்று முறை வலம் வந்து வணங்கி விட்டு அழுகிய நிலையில் இருந்த நாயை முழுவதுமாக உண்டு அந்த இடத்தை சுத்தம் செய்தார்.

அப்போது, தனது சீட்ர்களையும், மகன்களையும் அழைத்து, சித்தையாவின் மேல் பொறாமை கொண்டீர்களே இப்போது புரிந்து கொண்டீர்களா? என்று கேட்க சீடர்களும், மகன்களும், வெட்கி தலை குனிந்து நின்றனர்.

மற்றொரு முறை கடப்பா நவாப் அவர்கள், சித்தையாவின் பெற்றோர் கொடுத்த புகாரின் காரணமாக, இஸ்லாம் மதத்தில் இருந்து இந்து மதகுருவை நாடக் காரணம் என்ன என்றறிய சித்தையாவை தன் அரண்மனைக்கு அழைத்து வரச் செய்தான். சித்தையாவும் நவாப்பின் கட்டளைக்கிணங்க தன் குருவின் ஆசியுடன் அரண்மனைக்குச் சென்று நவாப்பை சந்தித்தார்.

தான் நவாப்பை சந்தித்ததும் நவாப்பிற்கு வணக்கம் செலுத்தாமல் ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். இதைப்பார்த்த நவாப் மிகுந்த கோபம் கொண்டு, எனக்கு ஏன் நீ மரியாதை செலுத்தவில்லை என்று கேட்டார். அதற்கு சித்தையா, எனது குரு ஒருவரே எனது மரியாதையை ஏற்கத் தகுதி வாய்ந்தவர். இந்த உலகில் மற்ற யாருக்கும் அந்த தகுதி இல்லை என்றார்.

அப்படியானால் அதை பரிசோதனை செய்து காட்டு நான் நம்புகிறேன் என்றார் நவாப். உடனே சித்தையா ஒரு பாறாங்கல்லை கொண்டுவரச்செய்து அதற்கு மரியாதை செலுத்தினார். மறுகணம் அங்கிருந்த அதிகாரிகளே அதிர்ந்து போனார்கள். ஆம் அந்த பாறாங்கல் பலநூறு துகல்களாக வெடித்துச் சிதறின.

உடனே நவாப் சித்தையாவின் குரு பக்தியையும், அவரின் சக்தியையும் உணர்ந்து கொண்டு, அவரை பணிந்து வணங்கி அவருக்கு காணிக்கை அளித்து

கௌரவித்து அவரை குருவிடம் அனுப்பி வைத்தார்.

ஸ்ரீ வீரபிரம்மம் தான் சமாதியாகும் போது சித்தையாவை அழைத்து தான் சமாதியடையப்போகப் போவதாகவும், அதற்காக நீ சென்று தேவதாரு பூக்களை பறித்துவா என்று அனுப்பி வைத்துவிட்டு சமாதியாகிவிட்டார்.

தேவதாரு பூக்களுடன் வந்த சித்தையா குருவின் சமாதி பீடத்தில், குருவே இனி நான் எப்போது தங்களை காண்பேன் என்று கண்ணீர்விட்டு அழுதார்.

அப்போது குருவின் குரல் சித்தையாவின் காதுகளில் ஒலித்தது. கவலை வேண்டாம் சித்தையா, என் சமாதி பீடத்தின் மேல் உள்ள பலகை யை அகற்று என்றார். சித்தையாவும் மேல் பலகையை அகற்ற, அங்கு குரு ஆழ்ந்த தவத்தில் இருப்பதைக் கண்டு அவருக்கு வணக்கம் செலுத்திவிட்டு சமாதியின் பலகையை மீண்டும் பழையபடி மூடினார்.

ஸ்ரீ வீரபிரம்மம் தான் வாழும்போது தன் நினைவாக ஏராளமான பொருட்களை சித்தையாவிற்கு வழங்கியுள்ளார். சுவாமிகளின் சமாதிக்குப்பின் சித்தையா நினைவுப் பொருட்களுடன் தனது ஊருக்கு செல்லும்போது, அதை கவர்ந்து செல்வதற்காக வீர பிரம்மேந்திரரின் மகன்கள் இரண்டு திருடர்களை அனுப்பி வைக்க, அந்த நேரத்தில் ஸ்ரீ வீரபிரம்மமே புலி வடிவில் வந்து திருடர்களை துரத்தி அவர்களிடமிருந்து சித்தையாவையும், நினை வுப் பொருட்களையும் காப்பாறியருளினார்.

சுவாமிகளின் பெற்றோர்கள் சித்தையா விற்கு திருமணம் செய்து வைக்க விரும்பி ஸ்ரீ வீரபிரம்மேந்தி ரரிடம் முறையிட, சுவாமிகளும், இல்லறமே நல்லறம், சம்சாரத்தில் இருந்து கொண்டே ஞானம் பெறுவதை மிகப்பெரிய தவம் என்று எடுத்துக் கூறி பெற்றோர் பார்த்த அச்சாம்பி என்ற மணமகளை சித்தையாவிற்கு சுவாமிகளே முன்னின்று திருமணம் செய்து வைத்தார்.

பின்னாளில் சித்தையா சுவாமிகளுக்கு குழந்தைகள் பிறந்து அனைவரும் தந்தையின் வழிப்படி ஆன்மீக வழியில் வாழ்ந்து வந்தனர். குருவின் அருளால் "சையத்" சித்தையா சுவாமிகளாகி, ஊர் மக்களால் ஸ்ரீ சித்தேந்திர சுவாமிகள் என்று அன்போடு அழைக்கப்பட்ட சுவாமிகள் தான் பிறந்த முதுமாலா கிராமத்திலேயே சீவசமாதி ஆனார்.

பிற்காலத்தில் சுவாமிகளின் மகன்களின் சமாதிகளும் சுவாமிகளின் சமாதி திருக்கோவிலின் வளாகத்திலேயே அமைக்கப்பட்டன. ஸ்ரீ சித்தையா சுவாமிகளை வணங்கி அவரின் ஆசிகளைப் பெற்று நமது வாழ்வின் கர்ம வினைகளின் வீரியத்தை குறைத்துக்கொள்வோம்.

<u>சீவசமாதி ஆலய முகவரி:</u>

அருள்மிகு சித்தையா சுவாமி சீவ பீடம், முதுமாலா கிராமம், கந்திமல்லையா பள்ளி அஞ்சல், கடப்பா மாவட்டம், ஆந்திர மாநிலம்.

(சென்னையில் இருந்து வருபவர்கள் மாதவரம் பேரூந்து நிலையத்தில் இருந்து கடப்பா சென்று அங்கிருந்து டவுன் பஸ் மூலம் கந்திமல்லையபள்ளி சென்று ஸ்ரீ வீரபிரம்மேந்திரரின் சமாதியை தரிசித்து, அங்கிருந்து, ஆட்டோ மூலம் முதுமாலா கிராமத்தில் உள்ள சுவாமிகளின் சீவ சமாதியை அடையலாம்.)

"சித்தர்களின் சீவசமாதியைத் தொழுவோம்! கர்மவினை அகன்று கவலையின்றி வாழ்வோம்"!

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai
Gpay: 6385129372

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

செல்வி.ஜி.அபர்ணா. வலங்கைமான். ரூ.3000.

திரு.பாலகிருஷ்ணன். அண்ணாநகர் ரூ.3000.

திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம்.ரூ.2000.

செல்வி.ஸ்வேதா. திருமங்கலம். ரூ.1000.

திருமதி.சாந்தி.மயிலாப்பூர். ரூ.700.

பி. அருணா சாய்ராம். விழுப்புரம். ரூ.500.

திருமதி.நேத்ராலட்சுமி. கோவை.ரூ.500.

திருமதி.வாழ்க வளமுடன் சுமதி. கொளத்தூர். ரூ.500.

திருமதி.மகாலட்சுமி பொன்முருகன். மதுரை. ரூ.500.

திரு.சாய்பிரபு. வில்லிவாக்கம். ரூ.500.

திரு.சாய்கிருபா. வாடிப்பட்டி.ரூ.500.

திருமதி.லதாபாபு. வேப்பம்பட்டு. ரூ.500.

திரு.கருணாமூர்த்தி.அயனாவரம். ரூ.500.

திருமதி. வசந்தா(எ) கமலா. அயனாவரம். ரூ.500.

திருமதி. உமா விஜய்ஆனந்தன். அயனாவரம்.ரூ.400.

திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.

திரு.எஸ்.பி.பாலசுப்பிரமணியன். சீரடி. ரூ.324.

திருமதி. பவித்ரா. கொளத்தூர்.ரூ.300.

திருமதி. ஜானகி சீனிவாசன். கொளத்தூர். ரூ.300.

திருமதி.நித்யா ராஜேந்திரன். கூடுவாஞ்சேரி. ரூ.300.

செல்வி. சாய்அர்ச்சனா. சென்னை. ரூ.250.

திருமதி. பிரியதர்ஷினி, மடிப்பாக்கம். ரூ.250

திரு. கார்த்திகேயன்.கதிர். ரூ.200.

திரு.குமரன் ஸ்டோர்ஸ் டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.

திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட்.கொளத்தூர். ரூ.200.

திரு.சூர்யா. கேபிள்.டி.வி. மாவுத்தன்பட்டி. ரூ.150.

திருமதி.வரலட்சுமி பிரபாகரன். அயனாவரம்.ரூ.200.

திருமதி.திலகா சியாம்சுந்தர். முகலிவாக்கம்.ரூ.101.

திருமதி.பிரியா குடும்பத்தார். அயனாவரம்.ரூ.100.

திருமதி. பிச்சையம்மாள்.பெரம்பூர். ரூ.100.

திருமதி. பிரியதர்ஷினி. சென்னை.ரூ.100.

திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100.

திரு.அண்ணாமலை. அண்ணாநகர். அரிசி.5 கி.

திரு.சீனிவாசன்மகாலட்சுமி திருவண்ணாமலை. தீபஎண்ணை 5லி

திரு. புவனா ஆதி குடும்பத்தார். அயனாவரம். அரிசி 1 மூ.

திரு.அகஸ்டின் குடும்பத்தார். குன்றத்தூர். அரிசி 1 மூ

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 220 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 550 (தபால் செலவு உள்பட)
* 5 வருச சந்தா - ரூ.1000 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு. 2,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

* திருமதி. பத்மா சந்திரன். பெரம்பூர். ரூ. 1000.
* திரு. குமார். கொளத்தூர். ரூ.501.
* திரு.சாய்கிருபா. வாடிப்பட்டி.ரூ.500.
* திருமதி. ஜானகி சீனிவாசன். கொளத்தூர். ரூ.200.
* திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார். பெரம்பூர். ரூ.200.
* திரு.திலகம். குரோம்பேட்டை.ரூ.200.
* திரு.வேணுகோபால்.நங்கநல்லூர்.100.
* திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன்.நங்கநல்லூர் ரூ.100

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

Sai maharaj Guruvaithedi -Tamil monthly - Registered with Registrar of Newspaper for India under no . TNTAM/2019/78281

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068